Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 25 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-ஆகிர் 01 (09.07.2005) சனிக்கிழமை இதழ்:283

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

## அதிவேக உந்துருளி அணி பயிற்சி நிறைவு நிகழ்வு!



திருகோணமலை —

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அதிவேக உந்துருளி (பீல்ட் பைக்) அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு சேனையூர் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் -

திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், தளபதி வசந்தன், திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் காருண்யா ஆகியோர் கலந்துகொண்டனர்.

### முத்தலிப் கொலை சந்தேகநபர்கள்

## புலனாய்வுத்துறை முக்கிய அதிகாரிகளை கொலைசெய்யத் திட்டமிட்டிருந்தனராம்!

### கொழும்புப் பத்திரிகை கூறுகிறது

கொழும்பு —

இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி லெப். கேணல் நிசாம் முத்தலிப் கொலைச் சந்தேகநபர்கள், மேலும் பல இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரிகளைக் கொல்ல முத்தலிப் கொலை சந்தேகநபர்கள் திட்டமிட்டிருந்ததாக - கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகை மேலும் தனது செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது -

இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவின் முதலாவது பற்றாலியன் கட்டளை அதிகாரியான லெப். கேணல் துவான் நிசாம் முத்தலிப் கொலையுடன் சம்பந்தப்பட்டதாக சந்தேகத்தின் பேரில் பண்டாரகமை பொலிஸா(12 ஆம் பக்கம் பார்க்க)


## 15,000 சட்டவிரோத ஆயுதங்கள் அழிப்பு!

கொழும்பு —


சர்வதேச ஆயுத ஒழிப்புத்தினமான நேற்று சுமார் 15 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் கொழும்பில் வைத்து அழிக்கப் பட்டன.

1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொலைகாரக் கும்பல்கள், பாதாள உலகக் குழுக்கள் மற்றும் தப்பி ஓடிய படையினரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களே புல்டோசர்கள் மூலம் அழிக்கப்பட்டன.

கடந்த 20 வருடகாலப் பகுதியில் சுமார் 35 ஆயிரம் சட் டவிரோத ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டன. இவற்றில் (12 ஆம் பக்கம் பார்க்க)




## கண்ணிவெடிகளை அகற்ற அமெரிக்க இயந்திரங்கள்!



கொழும்பு —

கண்ணிவெடிகளை அகற்ற றிமோட் கொன்றோல் இயந்திரங்களை இலங்கைக்கு வழங்கியுள்ள அமெரிக்கா - தனது மூன்று படையதிகாரிகளை பயிற்சி வழங்குவதற்காக வவுனியாவுக்கு அனுப்பியுள்ளது.

கண்ணிவெடிகளை வேகமாகவும், பாதுகாப்பாகவும் அகற்றக்கூடிய (12 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் படுகாயம்!

திருகோணமலை —

திருகோணமலை மாவட்டம் - தம்பலகாமத்தில் நேற்றுமுன்தினம் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.20 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் தம்பலகாமம் பத்தினிபுரத்தைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த ஜனாதிபதி வேட்பாளரை நியமிக்க சந்திரிகா முட்டுக்கட்டை!

### செயற்குழு கூட்டத்தையும் திசைதிருப்பினார்

கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளரின் பெயரை உடனடியாக அறிவிக்குமாறு கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பலரும் வற்புறுத்திய போதும் - ஜனாதிபதி சந்திரிகா அதற்கு மறுப்புத் தெரிவித்ததுடன், ஜனாதிபதி வேட்பாளரை தெரிவுசெய்வதற்காக 6 பேர் கொண்ட குழுவொன்றை அமைத்து கூட்டத்தின் போக்கை திசைதிருப்பினார்.

நேற்றுமுன்தினம் மாலை கூடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பெயர் அறிவிக்கப்படும் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவுசெய்யவும், எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாகத் திட்டமிடவும் குழுவொன்றை நியமிப்பதென மட்டுமே முடிவுசெய்யப்பட்டது.

ஜனாதிபதி தலைமையிலான இந்தக் குழுவில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் அனுர பண்டாரநாயக்க, ரத்னசிறி (12 ஆம் பக்கம் பார்க்க)

# செயற்குழு கூட்டத்தையும் திசைதிருப்பினார்

கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேடபாளரின் பெயரை உடனடியாக அறிவிக்குமாறு கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பலரும் வற்புறுத்திய போதும் - ஜனாதிபதி சந்திரிகா அதற்கு மறுப்புத் தெரிவித்ததுடன், ஜனாதிபதி வேட்பாளரை தெரிவுசெய்வதற்காக 6 பேர் கொண்ட குழுவொன்றை அமைத்து கூட்டத்தின் போக்கை திசைதிருப்பினார்.

நேற்றுமுன்தினம் மாலை கூடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பெயர் அறிவிக்கப்படும் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவுசெய்யவும், எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாகத் திட்டமிடவும் குழுவொன்றை நியமிப்பதென மட்டுமே முடிவுசெய்யப்பட்டது.

ஜனாதிபதி தலைமையிலான இந்தக் குழுவில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் அனுர பண்டாரநாயக்க, ரத்னசிறி (12 ஆம் பக்கம் பார்க்க)

## 18 ஆம் திகதி விவாதம்!

கொழும்பு —

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட பொதுக்கட்டமைப்பு உடன்பாடு தொடர்பான இரண்டுநாள் நாடாளுமன்ற விவாதம் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. சுனாமி பொதுக் கட்டமைப்பு குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கட்டமைப்பின் இயக்கம் வழக்குகளால் பாதிக்கப்படாது!

### அரச சமாதான செயலகம் தெரிவிப்பு

கொழும்பு —

சுனாமி நிவாரணசபை உடன்படிக்கைக்கு எதிராக தற்பொழுது அரசியல் கட்சிகள் சிலவற்றால் உயர்நீதிமன்றில் முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் அது சபையின் வியூகங்களை தயாரிப்பதற்கும் அங்கத்தவர்களை நியமிப்பதற்கும் அது எந்தவித தடையாகவும் இருக்கமாட்டாதென அரசாங்க சமாதான செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த முறையீடுகளில் எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்திற்குமான பதில் கூறக்கூடிய விபரமான அறிக்கையை சட்ட மா அதிபர் கமலசபேசன் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை உயர் நீதிமன்றில் சமர்ப்பிப்பார் எனவும் அவர் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

### சட்ட ரீதியான கட்டுப்பாடுகளால்

## அமெரிக்கா வழங்கும் நிதி உதவிகள் பொதுக்கட்டமைப்புக்கு கிடையாதாம்!

கொழும்பு —

சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் காரணமாக சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்புடன் இணைந்த நம்பிக்கை நிதியத்தினூடாக அமெரிக்க நிதியுதவிகள் வழங்கப்படமாட்டாது என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

நேற்று அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளததாவது -

வடக்கு - கிழக்கில் வசிக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களுக்கும் பாரபட்சமற்ற முறையில் துரிதமாக நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொடுக்க (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு —

200 மீற்றர் கடல் பாதுகாப்பு வலயத்தை ரத்துச் செய்யுமாறு கோரியும் - பொதுக்கட்டமைப்பை உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க கோரியும் மட் டக்களப்பு - கல்லடிப் பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தை மேற்கொண் டனர்.

சுனாமி அனர்த்தத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட கல்லடிப் பிரதேச மக்களே இந்த ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

திருச்செந்தூர், நாவலடி, டச்பார், கல்லடி, முகத்துவாரம் மற்றும் வேலூர் கொலணி ஆகிய இடங் களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

கடல்வளம் மற்றும் வாவி வளம் ஆகியவற்றை



நம்பி வாழும் இந்த மக்கள் தங்களுக்கான இருப்பிடங்களை ஏற்கனவே வசித்துவந்த இடங்களிலேயே ஏற்படுத்தித்தர வேண்டும் என்றும் இந்த ஆர்ப் பாட்டத்தின்போது (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தால் தோல்வி!

திருகோணமலை —

திருகோணமலை மாவட்ட முஸ்லிம் மாணவ சம்மேளத்தால் நேற்று அழைப்பு விடுக்கப்பட்ட ஹர்த்தால் வெற்றி பெறவில்லை. முஸ்லிம்களின் சில வர்த்தக நிலையங்களும் முஸ்லிம் பாடசாலைகள் மூன்றும் மட்டுமே மூடப்பட்டிருந்தன.

ஏனைய அரச செயலகங்கள், வர்த்தக நிலையங்கள், சந்தைகள், என்பன வழமை போன்று இயங்கின. அரச -தனியார் போக்குவரத்துச் சேவைகளும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன் குண்டு வெடிப்புகளால் இலங்கையருக்கு பாதிப்பில்லை!

### வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு —

லண்டனில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளில் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்பட்டதாகத் தமக்குத் தகவல்கள் கிடைக்கவில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஏற்கனவே காயப்பட்ட அல்லது உயிரிழந்தவர்களில் இலங்கையர்கள் எவரும் சிக்குண்டதாக எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

ஆயினும், லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் அது குறித்து மிகுந்த அவதானத்துடனும், தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டுடனும் இருப்பதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தநிலையில், பிரிட்ட னில் உள்ள தமது உறவினர்கள் குறித்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# தற்காலிக முகாம்களில் ஆற்றுப்படுத்தல் நிகழ்வு!

யாழ்ப்பாணம்

மகளிர் அபிவிருத்தி நிலையம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களை ஆற்றுப்படுத்தும் நோக்கில் அரங்கச் செயற்பாட்டுடன் கூடிய பல கருத்தரங்குகளை பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடத்தி வருகின்றது.

இந்தத் தொடரின் அடுத்த நிகழ்வு - பருத்தித்துறை இடைத் தங்கல் முகாம்களில் கடற்தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து இன்று நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஸ்ரீபதி, எரின்ரோ கல்பனா, பாலவதனி சுப்பிரமணியம், கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## ஓய்வூதியம் பெறுவோர் கவனத்திற்கு

சாவகச்சேரி

தென்மராட்சிப் பிரதேச செயலத்தினூடாக ஓய்வூதியம் பெறும் விதவைகள், தபுதாரர்களது ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்படவுள்ளதால் அவர்களிடமிருந்து விபரங்கள் கோரும் படிவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஓய்வூதியர்களின் கணவன் அல்லது மனைவி ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியிருப்பின் மட்டுமே அவர்கள் இப்படிவத்தை நிரப்பி அனுப்பவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய சேவையில் இருந்து இளைப்பாறியவர்களது ஓய்வூதியம் பிரதேச செயலக ஓய்வூதியப் பகுதியினரால் மீளாய்வு செய்யப்படும். (24)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்

முன்னாள் வானொலி அறிவிப்பாளர் எஸ்.புண்ணியமூர்த்தி எழுதிய The News Read எனும் நூல் வெளியீடு - நாளை மாலை 4.30 மணியளவில் ஊடகவள பயிற்சி நிலையத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நூலுக்கான அறிமுகவுரைகளை மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா - நடராஜா, தினக்குரல் ஆசிரியர் எஸ்.ரகுராம், பாதுகாவலன் ஆசிரியர் வண. பிதா ரூபன் மரியாம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

## பயனாளிகள் தெரிவுக்கான கூட்டம்

சாவகச்சேரி

ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி கல்வயல் கிராம அலுவலர் பிரிவில் சுமார் 10 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகலரையும் கலந்து கொள்ளுமாறு கல்வயல் கிராம அலுவலர் வை. இராசரத்தினம் கேட்டுள்ளார். (24)

## சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்

தொண்டைமனாற்றில் வீடொன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. அருணாசலம் ஜெகதீஸ்வரன் (வயது 34) என்பவரே சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

மேற்படி நபரின் மரணம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

சங்கானை

சங்கானை நாகலிங்க சுவாமி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி ச.தர்மராசா தலைமையில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மைதானத்தில் நாளை பி.ப 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், சிறப்பு விருந்தினராக வலி-மேற்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் அன்பு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (47)

## முகாமைத்துவ பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்தில் உள்ள கிராமிய மட்ட அமைப்புக்களின் நிர்வாகிகளுக்கு அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் இணையத்தால் (Sond) முகாமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் ந.ஷைலஜா தெரிவித்தார்.

வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம், நல்லூர், கோப்பாய் ஆகிய பிரதேசங்களில் உள்ள கிராமிய மட்ட பொது அமைப்புக்களின் நிவர்வாகிகளுக்கு நிர்வாகத்தை நிர்வகிப்பது தொடர்பான தலைமைத்துவப் பயிற்சி நாளை காலை 10 மணியிலிருந்து 4 மணி வரை அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் இணையத்தின் அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் பணிப்பாளர் எஸ்.செந்தூர்ராஜாவின் தலைமையில் இடம்பெறவுள்ளது. (20)

# குருநகர் உத்தரிய மாதா கொடியேற்றம் இன்று!

குருநகர்

குருநகர் உத்தரிய மாதா தேவாலய நவநாள் கொண்டாட்டங்கள் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எட்டுத் தினங்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

தினமும் மாலை 5.45 மணிக்கு செபமாலையுடன் தொடங்கி ஆராதனை, பிரசங்கம், வழிபாடு, திருப்பலி, சொரூப ஆசீர்வாதம் என்பன நடைபெறும்.

15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழா செபமாலையுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து திருச்சொரூப பவனி, அசீர்வாதம் என்பன இடம்பெறும்.

16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். மாலை 6 மணிக்கு திருச்சொரூப பவனி செபமாலையுடன் ஆரம்பமாகும்.

இறுதியில் அன்னையின் திருச்சொரூப ஆசீர்வாதம் வழங்கலுடன் திருவிழா நிறைவடையும். (206)

# நாகர் கோவில் மகாவித்தியாலயத்தை கற்கோவளத்தில் இயக்கக் கோரிக்கை!

ஆழியவளை

நாகர்கோவில் மகாவித்தியாலயத்தை கற்கோவளம் புனித நகர்ப் பகுதியில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாகர்கோவில் மகாவித்தியாலய பாடசாலைச் சமூகத்தினர் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இந்தப்பாடசாலை புலோலி கிராமக் கோட்டுச் சந்தியிலுள்ள தேவாலயப் பகுதியிலேயே இயங்கி வருகின்றது. நாகர்கோவில் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த பெரும்பாலான மக்கள் கற்கோவளம் புனித நகர்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களிலேயே வசித்து வருகின்றனர்.

இந்தநிலையில் - மாணவர்களின் நலன் கருதி மேற்படி பாடசாலையினை கற்கோவளம் புனித நகர்ப்பகுதியில் இயக்குவதன் மூலம், மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

இந்தப் பாடசாலை 2000 ஆம் ஆண்டில் இராணுவ நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்து, பின்னர் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (122)


நல்லூர் பிரதேச செயலக கலாசாரபேரவை நடத்தும்

**கலாசார விழா - 2005**



தலைவர் : திருமதி சு.தெய்வேந்திரம்
(நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவைத் தலைவரும், பிரதேச செயலரும்)

காலம் : 09.07.2005 – சனிக்கிழமை
10.07.2005 – ஞாயிற்றுக்கிழமை
ஆகிய இரு தினங்களில் பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகும்.

இடம் : நல்லூர் இளங்கலைஞர் மண்டபம்
(சட்டநாதர் கோவில் வீதி)

முதலாம் நாள் நிகழ்வுகள் 09.07.2005

பிரதம விருந்தினர் : திரு ஆ.சிவசுவாமி
(மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)

கௌரவ விருந்தினர் : திரு சி.இளம்பரிதி
(பொறுப்பாளர், அரசியல்துறை, யாழ்.மாவட்டம்)

சிறப்பு விருந்தினர் : திரு அ.குமாரவேல்
(விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி)

இரண்டாம் நாள் நிகழ்வுகள் 10.07.2005

பிரதம விருந்தினர் : திரு க.கணேஷ்
(அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)

கௌரவ விருந்தினர் : திரு.புதுவை இரத்தினதுரை
(பொறுப்பாளர், கலைபண்பாட்டுக் கழகம்)

சிறப்பு விருந்தினர் : கலாநிதி எஸ்.சிவலிங்கராசா
(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிரதேச செயலகம்,
நல்லூர்.

நல்லூர் பிரதேச செயலகம்,
கலாசார பேரவை.

ஊடக அனுசரணை – நமது ஈழநாடு

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ரமேஷ், பூஜா, சரத்குமார் நடித்த

**ஜித்தன்**



பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

**நாகம்ஸ்** சுன்னாகம்

விஜயசாந்தி, சுஜாத்தா, லக்ஷ்மி நடித்த

**சூர்யா**



காட்சிகள்:– 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

**ராஜா** யாழ்ப்பாணம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல் நடித்த

**சந்திரமுகி**



பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**நாகதீஸ்வர** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

சத்தியராஜ், சுனிதாவர்மா வடிவேல் நடித்த

**6.'2"**



வெகு விரைவில்
அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த

**சின்னா**

காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**மனோகரா** யாழ்ப்பாணம்

3 ஆவது ஜனத்திரள் வாரமாக
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்

**அந்நியன் anniyan**



இசை:- ஹரிஸ் ஜெயராஜ்
இயக்கம்:-சங்கர்

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**மங்களகரமான திறப்பு விழா அழைப்பு**

ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் – (இலங்கை) வரை யாழ்ப்பாணக் கிளை

பேரன்புடையீர்!
எமது கூட்டுத்தாபனத்தின் யாழ்.கிளையின் மற்றுமொரு அபிவிருத்திக் கிளையானது =

**சாவகச்சேரியில்**

105 கண்டி வீதி, சாவகச்சேரி ஏனும் முகவரியில்



இன்று (09.07.2005) சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் 8.30 மணிவரை வரும் சுபமுகூர்த்த நல்வேளையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்பதை சகலருக்கும் அறியத் தருவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

ஆகவே இந்தத் திறப்புவிழா ஆரம்ப வைபவத்துக்கு அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

– யாழ்.கிளை முகாமையாளர்.

(C/4270)

**சிறுவிளம்பரம்**

**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P- 0779122836
நேரம்:காலை9.00 - 8.30 வரை. (1198)

# பயங்கரவாத நிதியளிப்புத் தடைச்சட்டம் தமிழ்மக்களை ஒடுக்கவே பயன்படும்

## மாவை சேனாதிராசா எம்.பி.சாடல்

கொழும்பு—

உலக நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்களைச் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வரும் நிலையில் பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருப்பது சந் தேகத்துக்குரியது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவித்தனர்.



பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சட்ட மூலத்தை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்தச் சட்டமூலம் மீதான விவாதத்தை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உரையாற்றுகையில் -

தமிழ் மக்கள் மீதும், அவர்களின் பொதுக்கட்டடங்கள் மீதும் குண்டுகள் வீசுவதும், உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களை அவர்களது சொந்த இடங்களிலிருந்து விரட்டியடித்தமை பயங்கரவாதம் இல்லையா?

சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களிலிருந்தும் அரசாங்கத்தின் அரச பயங்கரவாதத்திலிருந்தும் தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காகவே புலிகள் ஆயுதம் ஏந்தினார்கள்.

சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக இந்த சட்டமூலம் கொண்டுவரப்படுகிறது எனக் கூறினாலும் இது தமிழ் மக்களுக்கு எதிராகவே கொண்டு வரப்படுகிறது. 1979 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது, இந்தச் சட்டம் தென்னிலங்கை பயங்கரவாதிகளை ஒடுக்கவே கொண்டு வரப்பட்டதாக அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தெரிவித்திருந்தார்.

ஆனால் அந்த சட்ட மூலத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள்தான். தமிழர்களுக்கு தனியான இறைமையும் தன்னாதிக்கமும் உள்ளது. சுயநிர்ணய உரிமை உண்டு.

தமிழர்களுக்கான அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு, தீர்வு ஒன்று வரும்போது, உங்கள் அரசியலமைப்பும் சட்டங்களும் எம்மை ஒருபோதும் கட்டுப்படுத்தாது. பேரினவாத அரசாங்கங்களின் அரசியலமைப்பை நாங்கள் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை. பயங்கரவாதத்துக்கு என்ன வரைவிலக்கணம் கூறுகிறீர்கள்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக கொழும்புக்கு வந்தபோது, அணிவகுப்பு மரியாதையில் ஈடுபட்ட இராணுவவீரர் ஒருவர் தனது துப்பாக்கியால் ராஜீவ் காந்தியை தாக்க முற்பட்டார். அந்த இராணுவ வீரருக்கு தண்டனைகூட வழங்கப்படவில்லை. மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை பற்றி பேசுகிறீர்கள் தமிழ்த் தேசியத்தை அடக்க முடியாது. அரச பயங்கரவாதத்துக்கு எதிராக சர்வதேச நாடுகளில் பிரசாரம் செய்வோம் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து இரா சம்பந்தன் உரை நிகழ்த்துகையில் -

சர்வதேச பயங்கரவாதம் என்பது வேறு, ஒரு இனத்துக்கான விடுதலைப் போராட்டம் என்பது வேறு. அமெரிக்காவுக்கு அல்கெய்டா இயக்கமும், பின்லேடனும் அச்சுறுத்தலாக உள்ளனர். அது சர்வதேச பயங்கரவாதம். ஆனால் அதற்கு எதிரான சட்டமூலத்தை எமது நாட்டில் அமுல்படுத்த வேண்டிய அவசியம் என்ன?

புலிகள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்றனர். ஒரு நாட்டின் ஒரு இன மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் சர்வதேச பயங்கரவாதத்தையும் ஒன்றாக நோக்க முடியாது.

தமிழ் மக்கள் அரசியல் ரீதியான பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். அரசியல் யாப்புகள் தமிழ் மக்களை சகல வழிகளாலும் புறக்கணித்துள்ளது. ஆகவே சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின்படி எமது சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்துவதற்காகவே புலிகள் போராடுகின்றனர்.

அது பயங்கரவாதம் அல்ல எனவும் அவர் மேலும் தொிவித்தார்.

# பயங்கரவாதத்துக்கு நிதி வழங்குவதை கட்டுப்படுத்தும் சட்டம் நிறைவேறியது!

கொழும்பு —



பயங்கரவாதத்துக்கு நிதி வழங்கும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டமூலத்தினால், பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பயங்கரவாதத்துக்கு நிதியளிப்பதற்கு எதிரான பிரகடனப்படி இந்தச் சட்டமூலம் வரையப்பட்டுள்ளது.

இதன் மூலம் பயங்கரவாதத்துக்கு உதவுபவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, தண்டனை வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணை மீது உரையாற்றிய ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க சுனாமி பொதுக் கட்டமைப்பின் ஊடாக முழுமையான நிதிக்கட்டுப்பாட்டு உரிமை அரசாங்கத்தால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை வெளியுறவு அமைச்சருக்குப் பாரிய பின்னடைவாகும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுக்கட்டமைப்பின் ஊடாக இந்தியாவுக்கு எதிராக பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

இந்தச் சட்ட மூலம் 60 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐ.தே.க, தேசிய ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிஸிலிருந்து பிரிந்த 4 எம்.பிக்களும் ஆதரவாக வாக்களித்தனர். ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனும், 20 கூட்டமைப்பு எம்.பிக்களும் இந்தப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா முஸ்லிம், காங்கிரஸ் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் சபையில் இருக்கவில்லை.

# இடமாற்றங்களைப் பெறவிரும்பும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு—

அடுத்த ஆண்டு இடமாற்றங்களைப் பெறவிரும்பும் ஆசிரியர்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப்படிவங்களை அதிபரின் சிபார்சுடன் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் தெரிவித்தார்.

கஷ்டப் பிரதேச [illegible]சாலைகளில் நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாகச் சேவையாற்றிய ஆசிரியர்கள் மற்றும் வசதியான பிரதேச பாடசாலைகளில் அறு ஆண்டுகள் தொடர்ச்சியாகக் கடமையாற்றிய ஆசிரியர்கள் ஆகியோர் இடமாற்றம் கோரத் தகுதியானவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

53 வயதைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் மற்றும் கர்பிணித் தாய்மார்களாகவுள்ள ஆசிரியர்கள் ஆகியோருக்கு அவர் களது விருப்பத்துக்கு மாறாக இடமாற்றங்கள் வழங்கப்பட[illegible]ாது என்றும் வலயக் கல்விப் ப[illegible]ாளருக்குப் பணிப்புரை வழங்கபபடவுள்ளது.

# ஜே.வி.பியை மீண்டும் இணைக்குமாறு மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள்



கொழும்பு—

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தில் மீண்டும் ஜே.வி.பியை இணைத்து, அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்லுமாறு அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் தனிப்பட்ட செயலாளர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அரசாங்கத்தில் ஜே.வி.பியை மீண்டும் இணைக்கும் செயற்பாட்டு நடவடிக்கைக்கு அமைச்சர்களான அனுரா பண்டார நாயக்க மற்றும் மங்கள சமரவீர ஆகியோரின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் தனிப்பட்ட செயலாளர்களுக்கு மிடையே கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த வேண்டுகோள் விடுக் கப்பட்டது.

(தே)

# வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு வாய்க்கால்பாலம் கிராம மக்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்படவிருக்கும் வீடமைப்புத் திட்டத்தின் அடிக்கல் நாட்டுவிழா நேற்று முன்தினம் காலை 10.30 மணிளயவில் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.



போர்ச்சூழல், இயற்கை அனர்த்தம் என்பவற்றால் பாதிக்கப்பட்டு, சமூக பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படும் இந்தக் கிராம மக்களை, நிரந்தர குடிமனைகளில் குடியமர்த்தும் நோக்கில் இந்த வேலைத் திட்டச் செயற்பாடுகளைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முன்னெடுத்து வருகிறது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், மக்களுடன் கலந்துரையாடியதுடன், மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக, மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் சீசருடன் கலந்துரையாடினார்.

மக்களிடம் சேமிப்புப் பழக்கம் அவசியம் இருக்கவேண்டுமெனவும், அந்தக் கிராம சிறார்களுக்குக் கல்வி கற்பதற்கான வசதிகளைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொள்ளும் என்பதுடன், இந்தக் கிராமத்தவர்களுக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு பொதுக்கிணறு அமைக்கப்பட வேண்டியது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ் வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள், போராளிகள், பொது மக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்ட னர்.

# சந்திரிகாவுக்கு நோபல் பரிசு; நோர்வே ஆய்வாளர்கள் சிபார்சு!

கொழும்பு—

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கனை சமா தானத்துக்கான நோபல் பரிசுக்காக தெரிவுசெய்யுமாறு நோர்வே ஒஸ்லோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இருவர் பரிந்துரைத் துள்ளனர்.



டோர்கல் பிரேக்கி மற்றும் எரில்ட் இருட் ஆகியோரே இந்தப் பரிந்துரையைச் செய்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை போர் என்ற நிலையிலிருந்து விலகிச்செல்ல வைத்துள்ளமை மற்றும் இந்த விடயத்தில் பல தடங்கல்களையும் அவர் எதிர்கொள்வது போன்ற காரணங்களை மையமாகக் கொண்டு நோபல் பரிசுக்கு ஜனாதிபதி சந்திரிகாவை தாம் பரிந்துரை செய்வதாக குறித்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.




இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொாக்லண்ட் இரண்டு நாள் விஜயமாக நேற்று முன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்து - கடற்படை, விமானப்படை இராணுவ அதிகாரிகளுடனும், பிரதிப் பொலிஸ்மா அதிபருடனும் பேச்சுக்களை நடத்தினார்.

இதன்பின்னர் இவர் தனது விஜயத்தில் ஒரு கட்டமாகத் திருகோணமலை மாவட்டத்தில் கடல் மற்றும் த்ரைக் கண்காணிப்பாளர்களைச் சந்தித்து மாவட்டத்தின் நிலை தொடர்பாக நேற்றுமுன்தினம் கல்ந்துரையாடியபோதே எடுக்கப்பட்ட படம் இது.

## நட்வெஸ்ட் கிண்ண ஒருநாள் தொடர்

# அவுஸ்ரேலியாவை 9 விக்கெட்டுக்களால் வெற்றிகொண்டது இங்கிலாந்து அணி!



லீட்ஸ் —

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதல் நட்வெஸ்ட் தொடரில் முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளிடையேயான 3 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடரின் முதல் ஒருநாள் ஆட்டம் லீட்ஸில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஐ.சி.சியின் புதிய விதிமுறை முதல் முறையாக இந்தப் போட்டியில் அமுலாகியது. விக்ரம் சோலங்கி (இங்கிலாந்து), பிராட் ஹொக் (அவுஸ்ரேலியா) ஆகியோர் மாற்று வீரர்களாகக் களமிறங்கினர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, அவுஸ்ரேலிய அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக கில்கிறிஸ்ட், ஹைடன் ஜோடி களமிறங்கியது. கில்கிறிஸ்ட் ஆரம்பம் முதலே அடித்து ஆடினார். மறுமுனையில் ஹைடன் ஓட்டங்களை எடுக்கத் திணறினார். இங்கிலாந்து அணியின் பந்து வீச்சு சிறப்பாக இருந்தது.

அடித்து ஆடிய கில்கிறிஸ்ட் 42 ஓட்டங்களில் ஹார்மிசனின் பந்துவீச்சில் ஜோன்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 51 பந்துகளில் 5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து ஹைடன் 17 ஓட்டங்களில் பிளின்ரொப்பின் பந்து வீச்சில் பீற்றர்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஸ்கோர் 68 ஓட்டங்களாக இருந்தது.

கொலிங்வூட்டின் அபாரமான பந்துவீச்சில் பொண்டிங் (14), சைமன்ஸ் (6), கிளார்க் (2), மார்ட்டின் (43) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் அவுஸ்ரேலிய அணி 7 விக்கெட் இழப்புக்கு 219 ஓட்டங்களை எடுத்தது. ஹசே 52 பந்துகளில் 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 46 ஓட்டங்களுடனும், பிரெட் லீ 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இங்கிலாந்து அணியின் தரப்பில் கொலிங்வூட் 4, ஹார்மிசன் 2, பிளின்ரொப் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பின்னர் 220 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது.

ட்ரெஸ்கொதிக், ஸ்ரரஸ் ஆகியோர் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினார்கள். இருவரும் நிலைத்து நின்று அடித்து ஆடினார்கள். அணியின் ஸ்கோர் 101 ஓட்டங்களாக உயர்ந்தபோது இந்த ஜோடி பிரிந்தது. ஸ்ரரஸ் (41), ஹொக்கின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து கப்டன் வோன், ட்ரெஸ்கொதிக்குடன் இணைந்தார். இருவரும் நிலைத்து நின்று ஆடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். ட்ரெஸ்கொதிக் சதமடித்தார்.

46 ஓவர்களில் இங்கிலாந்து அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 221 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. ட்ரெஸ்கொதிக் 134 பந்துகளில் 8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 104 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். வோன் 59 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.



அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக இங்கிலாந்து பெற்ற மிகப் பெரிய வெற்றி இதுவாகும். இந்தச் சுற்றுப் பயணத்தில் 3 நாடுகள் போட்டியின் லீக் ஆட்டம் மற்றும் 20 ஓவர்கள் கிரிக்கெட், கவுண்டி அணி ஆகியவற்றுடன் தோல்வி கண்டிருந்த உலக சம்பியன் அவுஸ்ரேலியா மீண்டும் சறுக்கலைச் சந்தித்துள்ளது.



சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ள புதிய விதிமுறை இந்தப் போட்டியில் முதல் முறையாக கடைப்பிடிக்கப்பட்டது. இங்கிலாந்தின் விக்ரம் சோலங்கி முதல் மாற்று வீரர் என்ற பெருமை பெற்றார். இவர் சைமன்ஜோன்ஸுக்குப் பதிலாகக் களமிறக்கப்பட்டார். அவுஸ்ரேலிய அணியில் ஹைடனுக்குப் பதிலாக பிரட் ஹொக் மாற்று வீரராகச் செயற்பட்டார். களத்தடுப்பு கட்டுப்பாடு விதிமுறையை இரு அணியின் கப்டன்களும் முதல் 20 ஓவர்களுக்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

## இன்று நடைபெறும் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள கண்டி திருத்துவக் கல்லூரிக்கும், யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான 19 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டி இன்று யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (58)

☆ ☆ ☆

கோண்டாவில் —

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம், விளையாட்டுத்துறை ஆதரவில் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்திவரும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெற வுள்ள போட்டியில் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகமும், மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கைதடி துர்க்கா அணியை எதிர்த்து கொக்குவில் காந்திஜி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

☆ ☆ ☆


கொக்குவில் —

கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் 30 ஓவர்களைக் கொண்ட லீக் முறையிலான துடுப்பாட்டப் போட்டியில் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8 மணிக்கு யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்கந்தாஸ்ரார் அணியும், பிற்பகல் 1.00 மணிக்கு பற்றீசியன் அணியை எதிர்த்து கிறாஸ்கொப்பர்ஸ் அணியும் மோதவுள்ளன.

யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் காலை 8 மணிக்கு கே.சி.சி.சி அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் அணியும், பிற்பகல் 1.00 மணிக்கு ஜென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஓல்ட்கோல்ட்ஸ் அணியும் மோதவுள்ளன.

விளையாட்டு

# இலங்கை அணியில் மீண்டும் முரளிதரன் இடம் பிடித்தார்!



கொழும்பு —

இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் ஓராண்டு இடைவெளிக்குப் பின்பு சர்வதேச போட்டியில் பங்கேற்கவுள்ளார். மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான அணியில் அவர் இடம்பெற்றுள்ளார்.

இலங்கை வந்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இதற்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டது. காயம் குணமான நிலையில் முரளிதரன் மீண்டும் களமிறங்கவுள்ளார். கடைசியாக இவர், 2004 ஓகஸ்டில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ளார். இதன் பின் தோள் மூட்டு காயம் காரணமாக சத்திர சிகிச்சை செய்துகொண்ட இவர், சுமார் ஓராண்டு இடைவெளிக்குப் பின்பு அணிக்குத் திரும்பியுள்ளார்.

கப்டன் அத்தபத்து உட்பட முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் ஆறுபேர் அணியில் இடம் பெற்றுள்ளனர். ஆர்னல்ட், உபுல் சந்தன ஆகியோர் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளனர்.

அறிமுக வீரராக விஜேகோன் இடம்பெற்றுள்ளார். சகலதுறை ஆட்டக்காரரான இவர் 93 உள்ளூர் போட்டிகளில் 137 விக்கெட்டுக்கள், 4 ஆயிரத்து 273 ஓட்டங்களைக் குவித்துள்ளார். முதல் டெஸ்ட் எதிர்வரும் 13இல் கொழும்பிலும், இரண்டாவது டெஸ்ட் எதிர்வரும் 21இல் கண்டியிலும் தொடங்குகின்றன.

அணி விபரம் -

அத்தபத்து (கப்டன்), ஜெயவர்த்தன, ஜெயசூர்ய, சங்கஹார, சமரவீர, தில்சான், உபுல் சந்தன, சமிந்த வாஸ், சொய்சா, முரளிதரன், மலிங்க, விஜேகோன், ஆர்னல்ட் மற்றும் ஹேரத்.

# அஸ்ரா கிண்ண. கிரிக்கெட்டில் இன்று நடைபெறும் ஆட்டங்கள்!

யாழ்.மாவட்ட பாடசாலை 17 வயதுப் பிரிவு அணிகளிடையே நடைபெற்றுவரும் அஸ்ரா கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டித் தொடரின் முதலாம் சுற்று ஆட்டங்களில் 3 போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பெரியபுலம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரியும்,

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியும்,

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (58)

# உதைபந்தாட்டப் போட்டி!

மாதகல் —

தமிழீழ விளையாட்டுத்துறை வலிகாம உதைபந்தாட்ட லீக் ஆதரவில் நமது ஈழநாடு ஊடக அனுசரணையுடன் சுனாமியால் உயிரிழந்த மாதகல் வாழ் பொது மக்களின் ஞாபகார்த்தமாக சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையில் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் -

இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் மணற்காடு அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவாலி சென்.மேரிஸ் (வெள்ளை) விளையாட்டுக் கழகமும், 4.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பாசையூர் அன்ரனிஸ் அணியை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

## மாதகல் சென்.தோமஸ் உதைபந்தாட்டம்

# நவாலி சென்.பீற்றர்ஸ், ஊரெழு றோயல் நேற்றைய போட்டிகளில் வெற்றிபெற்றன!

மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரின் நேற்றைய இரு வேறு ஆட்டங்களில் நவாலி சென்.பீற்றர்ஸ் மற்றும் ஊரெழு றோயல் அணிகள் வெற்றிபெற்றன.

நேற்றுமாலை 3.30 மணியளவில் நவாலி சென்.பீற்றர்ஸ் மற்றும் தாவடி காளியம்பாள் ஆகிய அணிகளுக்கிடையில் முதலாவது ஆட்டம் இடம்பெற்றது. இதில் ஆட்டம் ஆரம்பித்து முதலாவது நிமிடத்திலேயே சென்.பீற்றர்ஸ் அணி வீரர் பிரிந்தன் காளியம்பாள் அணிக்கு அதிர்ச்சியளிக்கும் வகையில் கோலொன்றைப் போட்டு ஆட்டத்தை விறுவிறுப்பாக்கினார்.

இதன்பின் 35ஆவது நிமிடத்திலும் பிரிந்தன் தனது அணிக்காக மற்றொரு கோலைப் போட்டார். இதன்பின்னர் 40ஆவது நிமிடத்தில் சென்பீற்றர்ஸ் அணி வீரர் தேவானந்தம் ஒரு கோலைப் போட்டார். இந்த நிலையில் காளியம்பாள் வீரர் விமல்ராஜ் தனது அணிக்காக ஒரு கோலைப்போட 44ஆவது நிமிடத்தில் சென்.பீற்றர்ஸ் வீரர் பிரிந்தன் மீண்டும் தனது அணிக்காக ஒரு கோலைப் போட்டார். இறுதியில் சென்.பீற்றர்ஸ் அணி 4:1 என்ற கோல் அடிப்படையில் காளியம்பாளை வெற்றி கொண்டது.



இதனையடுத்து 4.30 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துக்குமிடையேயான ஆட்டம் ஆரம்பமானது. இதில் ஆட்டம் ஆரம்பித்து முடிவடையும்வரை றோயல் அணி வீரர்களின் ஆதிக்கமே நிலவியது.

இந்தவகையில் 17ஆவது நிமிடத்தில் றோயல் வீரர் கபிலன், 38ஆவது நிமிடத்தில் நேசன், 43, 47, 49 ஆவது நிமிடங்களில் வெள்ளையும் அற்புதமாக கோல்களைப் போட்டு தமது அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றனர். இந்தப் போட்டியில் றோயல் வீரர்களின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர்கள் இறுதிவரை முயன்றும் கோல் எதனையும் போடவில்லை. இறுதியில் ஊரெழு றோயல் 5:0 என்ற வகையில் வெற்றிபெற்றது.

# பாலு கரடியும் தேன் கேக்கும்






*சிறுவர் அரங்கம்*

# துருவன்



சிந்தனைக்கு

குழந்தைகளின் மனம் மென்மையானது

அன்புக்குரிய சிறுவர்களே!

பாடசாலையில் உங்களுக்கு பரீட்சைகள் வைப்பார்கள். பின்னர் அதற்கான புள்ளிகள் தரப்படும். அந்த மதிப்பீட்டு அறிக்கையை வீட்டில் கொண்டுபோய்க் காட்டுவீர்கள். அப்பாவோ அல்லது அம்மாவோ பாராட்டிய படி அல்லது ஏசியபடி மதிப்பீட்டு அறிக் கையில் கையொப்பம் இடுவார்கள்.

அதன் பின்னர் நீங்கள் என்ன செய்வீர்கள்? மதிப்பீட்டு அறிக்கையை மூடி பாடசாலை பையில் வைத்துவிட்டு விளையாடப்போய் விடுவீர்கள். அடுத்த அரையிறுதி அல்லது ஆண்டிறுதிப் பரீட்சை வரை,புள்ளிகள் பற்றிய ஞாபகம் வராது. மீண்டும் வீட்டில் பாராட்டோ ஏச்சோ வேண்டவேண்டி வரும்.

ஏச்சிலிருந்து நீங்கள் தப்புவதற்கு என்ன வழி?

பரீட்சை முடிந்து புள்ளிகள் வந்தவுடன் வீட்டுக்குப் போய் தனியாக ஓரிடத்தில் அமர்ந்து கொள்ளுங்கள். அதன் பின்பு உங்களிடமே சில கேள்விகள் கேளுங்கள்.

பரீட்சைக்கு நன்றாகப் படித்தேனா?

பாடங்கள் ஞாபகத்தில் இருக்கின்றதா?

எதற்காக புள்ளிகள் குறைந்தது?

அடுத்த முறை கூடுதல் புள்ளிகள் எடுக்க என்ன செய்ய வேண்டும்?

இப்படி உங்களிடமே கேளுங்கள்.

காரணங்களைக் கண்டுபிடித்து, அவற்றைத் திருத்திக் கொண்டால் அடுத்தமுறை பரீட்சையில் கூடுதல் புள்ளிகள் கிடைக்கும். பாராட்டுப் பெற்றவர்கள் நாங்கள் எதனால் பாராட்டுப் பெற்றோம் என்பதைக் கண்டுபிடித்து அதைக் கைவிடாமல் தொடர வேண்டும்.

- பாசமுடன் சாரு அக்கா

## ஆசான்

அன்புக் கதைகள் பல சொல்லும்  
ஆசை கொள்ளும் ஆசானே!  
இன்புற்று வாழ்ந்திடவே  
ஈற்றெழுத்துக் கற்றுத்தந்து  
உவகை கொள்ளும் ஆசானே!  
ஊரெல்லாம் போற்றிடும்  
எம்மவர் உள்ளத்தில் குடிகொள்ளும்  
ஏக தெய்வம் நீதானே!  
ஐயம் தனைக்கொண்டு அருகில் நின்றபோது  
ஒன்றாய் அணைத்து இன்பம் கொள்ளும் ஆசானே!  
ஓங்கிடும் உன் இனியமொழி  
ஔவையின் மொழி போல் தானே!

சி.ரேணுஜா  
யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்.  
தரம் - 09

## ஓவியப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்களின் பெயர்களும், ஓவியங்களும்.

பா.சென்சலோமி - தரம் : 10
யா/ புனித மரியாள் பாடசாலை






உ.ரமணன்
யா/விக்னேஸ்வராக் கல்லூரி
தரம் : 10

வ.ரிஷாந்தினி
யா /வைத்தீஸ்வராக் கல்லூரி
தரம் :- 11



## உங்கள் கைவண்ணம்



சா.சிந்துஜா
தரம் - 6

மாலைப்பொழுது. வானம் மஞ்சள் கலந்த இ
காணப்பட்டது. அந்த நிறத்தை வாங்கிய வண்ண
தொடர்ச்சி மலைக்குள் புகுந்து கொண்டிருந்தது.

ஆறாம் வகுப்புப் படிக்கும் கணேஷ் பாடசால
வந்தான். வந்தவுடன் புத்தகப்பையை இற



## ராஜகுமா

சமையலறைக்குப் போனான். அம்மா லட்டுகள்
வைத்திருந்தாள். இரண்டு லட்டுக்களை எடுத்து உ
வீட்டுப் பிள்ளைகளுடன் விளையாடப் போய்விட்ட

மாலை மங்கிக்கொண்டிருந்தது. கணேஎ
விளையாடினது காணும். வந்து படி என்று அம்மா

போய் கை, கால் கழுவிக் கொண்டு உன்
போயிருந்து படி, அம்மா மீண்டும் சொன்னாள்.

கணேஷ் கனநேரளமாக மும்முரமாகப் படித்த
கணேஷ் நேரம் போயிட்டுது. சாப்பிட வா. சாப்பி
போய்ப்படு. விடியற்காலையில் எழும்பிப் படிக்கலா

சாப்பிட்டு விட்டு, தாத்தாவுடன் படுத்தான். நி
தாத்தா ஒரு கதை சொல்லுங்கோ என்றான்.

பேரக்குழந்தை கேட்கிறதே என்று தாத்தாவ
தொடங்கினார்.

ஒரு ஊரில ஒரு ராஜா. அவருடைய ஆட்சியி
பொழிந்தது. அந்த ராஜாவுக்கு மீனான்னு ஒரு ர
போல நல்ல அழகு. அரண்மனையில் பாடங்க
வித்தைகளையெல்லாம் கற்றுக்கொண்டிருந்தாள்

அழகும் அறிவும் இணைந்த பொக்கிஷம் எ

# ராஜகுமாரி சந்தித்த வேதாளம்

மாலைப்பொழுது. வானம் மஞ்சள் கலந்த இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்பட்டது. அந்த நிறத்தை வாங்கிய வண்ணம் கதிரவன் மேற்குத் தொடர்ச்சி மலைக்குள் புகுந்து கொண்டிருந்தது.

ஆறாம் வகுப்புப் படிக்கும் கணேஷ் பாடசாலையில் இருந்து வீடு வந்தான். வந்தவுடன் புத்தகப்பையை இறக்கி வைத்துவிட்டு,



சமையலறைக்குப் போனான். அம்மா லட்டுகள் செய்து ஒரு தட்டில் வைத்திருந்தாள். இரண்டு லட்டுக்களை எடுத்து உண்டுவிட்டு, பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுடன் விளையாடப் போய்விட்டான் கணேஷ்.

மாலை மங்கிக்கொண்டிருந்தது. கணேஷ்! ஏய் கணேஷ் விளையாடினது காணும். வந்து படி என்று அம்மா சொல்ல ஓடிவந்தான்.

போய் கை, கால் கழுவிக் கொண்டு உன்னுடைய மேசையில போயிருந்து படி, அம்மா மீண்டும் சொன்னாள்.

கணேஷ் கனநேரளமாக மும்முரமாகப் படித்துக்கொண்டிருந்தான். கணேஷ் நேரம் போயிட்டுது. சாப்பிட வா. சாப்பிட்டிட்டு தாத்தாவோட போய்ப்படு. விடியற்காலையில் எழும்பிப் படிக்கலாம் என்றாள் அம்மா.

சாப்பிட்டு விட்டு, தாத்தாவுடன் படுத்தான். நித்திரை வரவில்லை. தாத்தா ஒரு கதை சொல்லுங்கோ என்றான்.

பேரக்குழந்தை கேட்கிறதே என்று தாத்தாவும் கதை சொல்லத் தொடங்கினார்.

ஒரு ஊரில ஒரு ராஜா. அவருடைய ஆட்சியில மாதம் மும்மாரி பொழிந்தது. அந்த ராஜாவுக்கு மீனான்னு ஒரு ராஜகுமாரி. தேவதை போல நல்ல அழகு. அரண்மனையில் பாடங்கள் படித்து, வீர தீர வித்தைகளையெல்லாம் கற்றுக்கொண்டிருந்தாள் ராஜகுமாரி.

அழகும் அறிவும் இணைந்த பொக்கிஷம் என்று நாட்டு மக்கள் இளவரசியைப் புகழ்ந்தார்கள்.

மீனாவுக்காகவே வனம் போன்ற அழகுடன் அரண்மனைக்குப் பக்கத்தில் நந்தவனம் அமைத்துக் கொடுத்தார் ராஜா. மாதம் ஒரு முறை அரண்மனையை விட்டு வெளியே வரும் மீனா - நந்தவனம் வந்து உலவிவிட்டுப் போவாள்.

அந்த ஊர் மக்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கும் நேரத்தில் அந்த ஊருக்குள் ஒரு வேதாளம் புகுந்தது. அந்த வேதாளம் இரவு நேரத்தில் ஊருக்குள் வந்து கலியாணம் முடிக்காத பெண்களைக் கொண்டுபோகும். வேறு ஒருவரிடமும் அந்த வேதாளம் போவதில்லை.

இந்த விடயம் ராஜாவுக்குத் தெரிந்து வேதாளத்தைக் கொல்ல ஆட்களை அனுப்பினார். ஆனாலும் அதைக் கொல்ல முடியவில்லை. ராஜா குழம்பிப்போய் சோர்வாக இருந்தார்.

ராஜாவின் மனக்கவலையை மீனா அறிந்தாள்.

ஒருநாள் ராஜகுமாரி நிறையத் தைரியத்துடன் இரவு நேரம் அரண்மனைப் பின்பக்க வாசல் வழியாக வேதாளத்தைப் பார்க்கப் போனாள். கொஞ்சத்தூரம் போய் ஊரைக் கடந்ததும், வெள்ளிக் கொலுசை காலில் பூட்டி ஜல்... ஜல் என்ற சத்தம் வாற மாதிரி நடக்க ஆரம்பித்தாள்.

ராஜகுமாரியைப் பார்த்த வேதாளம் - பாய்ந்து வந்து நின்றது. ராஜகுமாரி மீனாவுக்கு வேதாளத்தைப் பார்த்ததும் பயமாகிவிட்டது. இருந்தாலும், தைரியத்தை வரவழைத்துக்கொண்டு வேதாளத்தைப் பார்க்காத மாதிரி அமர்ந்திருந்தாள்.


அந்த நேரம் ராஜகுமாரியின் கண்ணைப் பார்த்த வேதாளம் - மின்னல் தாக்கிய மாதிரி தடுமாறியது. அதேவேளை ராஜகுமாரி சுதாகரித்தபடி, தனது இடுப்பில் இருந்த கத்தியைத் தூக்கி வேதாளத்தின் நெஞ்சில் எறிந்தாள். வேதாளத்தின் நெஞ்சு பிளந்து ரத்தம் பீறிட்டது.

வேதாளம் சாகப்போற நேரத்தில் ராஜகுமாரியை கூப்பிட்டுச் சொன்னது - தேவியாரே! நான் வேதாளம் இல்லை. பக்கத்து நாட்டு அரக்க வம்சத்தவன். உங்கள் ஊரில் செல்வச் செழிப்போடு மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதை, சீர்குலைக்க எங்கள் ராஜாவால் வேதாளம் வேடம் போட்டு அனுப்பப்பட்டவன் நான் என்று சொன்னான். இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவன் உயிர் பிரிந்தது.

நாடே ராஜகுமாரியைப் புகழ்ந்தது. வீரத்திருமகள் என்று அவளுக்கு முடிசூட்டி இளவரசி ஆக்கினார்கள்.

'என்னடா கணேஷ் அந்த ராஜகுமாரி மாதிரி நீயும் நல்லாப் படிச்சு வீரமா நல்ல தைரியத்தோட எதுக்கும் பயப்படாமல் இருக்கவேணும் என்ன! என்று தாத்தா கேட்க 'கொர்... கொர் என்று குறட்டையுடன் கணேஷ் நித்திரை ஆகியிருந்தான். விடியற்காலை ஆறு மணிக்கு படிப்பதற்காக கணேஷை எழுப்பி விட்டார் தாத்தா. கணேஷ் எழுந்து முகம் கழுவி விட்டு, வந்து புத்தகத்தை எடுத்தவாறு தாத்தாவிடம் கேட்டான்' 'என்ன தாத்தா! இரவு நீங்க ஏதோ ராஜா, ராஜகுமாரி, வேதாளம் என்று சொன்னீங்கள். ஆனா எனக்கு முழுக்கதையும் ஏன் சொல்ல வில்லை? என்று. தாத்தா கலகலவென்று சிரித்து விட்டார். நீங்கள்...?

ஒரு குதிரைக்கு மட்டும்
ாடுகள் தரப்பட்டுள்ளது.
ரைக்கு என்று குறிப்பிடுங்கள்?



## ...தையும் விடைகளும்

...ன கனியும் நானே. அடிபட்டால் இரண்டா... யார்?

...ந்த நூல் நான். தைக்க முடியாத நூல் நான்.

...டித்தாலும் அழமாட்டேன். என்னை ...ும் அழமாட்டேன் . நான் யார்?

...நீந்துகின்றேன். காலில்லை ஓடுகின்றேன். ...?

...றந்தவன். ஆகாயத்தில் பறக்கின்றேன்.

... சிப்பி நான். வாலில்லாத சிப்பி நான். ...ாத சிப்பி நான். தூங்குபவனை எழுப்பும் ... நான் யார்?

### விடைகள்

...கல்லூரி.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்


### விண்ணப்பம்

முழுப் பெயர் :......................................
கற்கும் பாடசாலை :......................................
கற்கும் தரம் :......................................
வீட்டு முகவரி :......................................
பிறந்த திகதி :......................................
ஆர்வமுள்ள துறைகள் :......................................

...................... ......................
திகதி ஒப்பம்


...................... ......................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## இரண்டு சிறுவர்களும் வரைந்த புள்ளியிட்ட கோடுகள் மாதிரி நீங்களும் வரைந்து பாருங்கள்



# மூளைக்கு வேலை

கடைசி வட்டத்தை நிரப்புங்கள்




## மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

- 13 சவர்க்காரங்கள் வாங்கலாம். 27 உறைகளுக்கு 9 சவர்க்காரமும் பின்னர் அந்த 9 சவர்க்காரங்களின் உறைகளுக்கு 3 சவர்க்காரமும் அந்த மூன்று சவர்க்காரங்களின் உறைகளுக்கு ஒரு சவர்க்காரமும் என (9+3+1) = 13 சவர்க்காரங்கள் வாங்கலாம்.

# உலக நாடுகளின் தேசிய சின்னங்கள்

| | |
|---|---|
| அமெரிக்கா | - தங்கத்தடி |
| பிரித்தானியா | - ரோஜா மலர் |
| கனடா | - வெள்ளை லில்லி |
| ஈரான் | - ரோஜாமலர் |
| யப்பான் | - கூட்டுப்புழு |
| ஸ்பெயின் | - கருடன் |
| எகிப்து | - தாமரைப்பூ |
| சீனா | - திராட்சை மலர் |
| ரூமேனியா | - பூவரசம் பூ |
| ஈராக் | - சிவப்பு ரோஜா |

கு.மணிமாறன்
யா/ஹாட்லிக் கல்லூரி.

# நல்ல கேள்வி! நல்ல பதில்!




காட்டில் இருந்த ஒரு குரங்கு தேன் கூட்டிலிருந்த தேனை உண்ண ஆசைப்பட்டது. ஆனால் தேன் கூட்டின் அருகே சென்றால் தேனீக்கள் கொட்டுமே என்று அஞ்சியது குரங்கு.

தேன் குடிக்கும் ஆசையினால் மரக்கிளை ஒன்றில் அமர்ந்தவாறு சுற்றும் முற்றும் பார்த்தபடி இருந்தது.

சிறிது நேரத்தில் தேனீ ஒன்று அங்கே பறந்து வந்தது. தன் அருகே பறந்து வந்த தேனீயைப் பார்த்து இவ்வளவு இனிமையான தேனை உண்டாக்கும் உங்களுக்கு ஏன் கொடுமையான கொடுக்குகள் இருக்கின்றன? - என்று கேட்டது குரங்கு.

அதற்குத் தேனீ, எங்கள் கடும் உழைப்பிற்கு ஏற்ப இனிமையான தேன் கிடைக்கிறது. எங்களை துன்புறுத்துபவர்களுக்குத் தகுந்த தண்டனை தரக் கூர்மையான கொடுக்குகள் எங்களுக்கு உள்ளன - என்று பதில் சொல்லியது.

ஒரே ஒரு குதிரைக்கு மட்டும் கோடுகள் தரப்பட்டுள்ளது. எந்தக் குதிரைக்கு என்று குறிப்பிடுங்கள்?




# விடுகதையும் விடைகளும்

1. காயும் நானே கனியும் நானே. அடிபட்டால் இரண்டாவேன். நான் யார்?
2. பார்க்க முடிந்த நூல் நான். தைக்க முடியாத நூல் நான். நான் யார்?
3. என்னை அடித்தாலும் அழமாட்டேன். என்னை உதைத்தாலும் அழமாட்டேன் . நான் யார்?
4. கையில்லை நீந்துகின்றேன். காலில்லை ஓடுகின்றேன். நான் யார்?
5. அனலில் பிறந்தவன். ஆகாயத்தில் பறக்கின்றேன். நான் யார்?
6. வட்ட வட்ட சிப்பி நான். வாலில்லாத சிப்பி நான். எலும்பில்லாத சிப்பி நான். தூங்குபவனை எழுப்பும் சிப்பி நான். நான் யார்?

## விடைகள்

1. தேங்காய்
2. சிலந்தி வலை
3. பந்து
4. படகு
5. புகை
6. டைம்பீஸ்

ஜே.டனுஷன்
சென் பற்றிக்ஸ் கல்லூரி.
தரம் - 05


# கண்டு பிடியுங்கள்

இந்தப் பாம்பின் உடலில் மொத்தம் 20 தனிச்சொற்கள் காணப்படுகின்றன.

இவற்றிலிருந்து தலா 2 சொற்கள் வீதம் தனிச் சொற்கள் பலவற்றை உருவாக்கலாம்.

உதாரணமாக -
மிதிவண்டி,
மல்லிகைமொட்டு.

நீங்கள் கண்டுபிடிக்க வேண்டியது இதுதான். இந்த 20 சொற்களிலிருந்து மூன்று சொற்களடங்கிய சொல் ஒன்றை உருவாக்கலாம். அது என்ன என்பதே இந்தப் புதிர்.










புற்களுக்குப் பின்னால்
யாரோ ஒளிந்திருக்கிறார்கள்.
யார் என்று கண்டுபிடிக்கவேண்டுமா?

புள்ளிகளைச் சரியாக இணையுங்கள்
ஒளிந்திருப்பவரைக் கண்டுபிடிக்கலாம்




இரண்டு படங்களிலும்
ஆறு வித்தியாசங்கள்
உள்ளன.
கண்டுபிடியுங்கள்.

# ஒளிந்திருப்பது யார்?

புற்களுக்குப் பின்னால்
யாரோ ஒளிந்திருக்கிறார்கள்.
யார் என்று கண்டுபிடிக்கவேண்டுமா?

புள்ளிகளைச் சரியாக இணையுங்கள்
ஒளிந்திருப்பவரைக் கண்டுபிடிக்கலாம்



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு*
*ஆழி எனப்படு வார்*

திருக்குறள்

# நமது நோக்கு

## புதிய சட்டமூலமும்; புதிய அச்சுறுத்தல்களும்

பயங்கரவாதத்துக்கு நிதியுதவி புரிவதைத் தடுக்கும் அல்லது முற்றாகவே ஒடுக்கும் வகையிலான சட்டமூலம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அறுபத்தியேழு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளமையானது, பல்வேறு சந்தேகங்களைத் தமிழ்பேசும் மக்களிடையே உருவாக்கியுள்ளது.

எப்போதுமே தமிழ் மக்களுக்கும், அவர்களது விடுதலைப் போராட்டத்துக்கும் எதிராக - என்னென்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் பேரினவாதத் தலைமைகளுக்கு விசுவாசம ாகவும் - அவர்கள் இடும் கட்டளைகளை சிரமேற்கொண்டு செய்பவராகவும் - கடந்த ஒரு தசாப்தகாலமாக இயங்கிவரும் வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களே இந்தச் சட்டமூலத்தையும் நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றியுள்ளமையையும், இதற்குப் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஜே.வி.பி ஆகிய பேரினவாதக் கட்சிகளின் உறுப்பினர்கள் மட்டுமே ஆதரவாக வாக்களித்தமையையும், கவனத்திற்கொண்டு பார்க்கும்போது இந்தச் சட்டமூலம் யாருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான உள்நோக்கத்துடன் கொண்டுவரபபட்டுள்ளது என்பதை உணர்ந்துகொள்ளமுடியும்.

இந்தச் சட்டமூலத்தை எதிர்த்து வாக்களித்த இருபது பேரும் தமிழர்கள் என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

இருநூற்று இருபத்தைந்து பேர்களைக்கொண்ட சபையில் வெறும் நூற்றியேழு பேர்கள் மட்டுமே வாக்கெடுப்பில் கலந்து கொண்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இவர்கள் இந்தச் சட்டமூலத்தை எதிர்க்கிறார்களா? அல்லது ஆதரிகக விரும்பவில்லையா? என்பது தெளிவாகாத ஒன்று. எவ்வாறாயினும் -

அரசின் சார்பில் ஒரு தமிழ் அமைச்சரால் முன்மொழயப்பட்ட இந்தச் சட்டமூலத்தை எதிர்த்தவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பதும், ஆதரித்தவர்கள் அனைவரும் சிங்களவர்கள் என்பதுமே இங்கு முக்கியமான செய்தியாகும்.

அந்தவகையில், பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமூலம் என்றபெயரில் தமிழர்களின் நலன்களுக்கும், இராணுவ பயங்கரவாதத்தில் பல தசாப்தகாலமாக அவலங்களைச் சந்தித்துவரும் தமிழ்மக்களுக்காகப் பல்வேறு வகையில் மனிதாபிமான ரீதியில் உதவும் அமைப்புகளை மற்றும் தனிநபர்களுக்கும் எதிரான, அவர்களை ஒடுக்குவதற்குமான ஒரு திட்டமிடலுடன் உருவாக்கப்பட்ட ஒன்றாகவே இந்தச் சட்டமூலத்தை தமிழ் மக்கள் பார்க்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுதல் இங்கு அவசியமாகின்றது.

இதனை, அரச - பேரினவாத தரப்பினர் பல்வேறு கற்பிதங்களைக்கூறி நிராகரிக்கலாம். ஆனால், அதனை தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பது உறுதி.

இந்தச் சட்டமூலத்தின்படி, விமானக்கடத்தல், பணயக் கைதிகளாக மக்களைப் பிடித்தல், விமான நிலையங்களில் வன்செயல்களில் ஈடுபடல், குண்டுத் தாக்குதல்கள், பொது மக்களுக்கு மரணத்தை மற்றும் உடலூறுகளை ஏற்படுத்தல் போன்றவற்றைப் பயங்கரவாதச் செயல்களாகக் குறிப்பிட்டுள்ள போதிலும், இந்தப் பட்டியலில் பயங்கரவாதச் செயல்களில் பலவற்றைப் பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் அரச படையினர், அரச உத்தரவுடன் தமிழ் மக்களுக்கு எதிராகக் கடந்த சில தசாப்தங்களாக மேற்கொண்டு வருவதையும், தமிழமக்கள் அதனை அரச பயங்கரவாதமாக அடையாளப்படுத்த வந்துள்ளதையும் இந்தச் சமயத்தில் தெரிவிப்பதும் அவசியமாகியுள்ளது.

அரச தரப்பினரால் பயங்கரவாதச் செயல்கள் எனப் பட்டியலிடப்பட்டவைகளை மேற்கொள்வோருக்கு நிதியுதவி செய்தல், நிதியுதவி செய்யத் தூண்டுதல் போன்றவற்றை கிட்டத்தட்ட ஆயுள்தண்டனைக்குரிய குற்றங்களாக இந்தச் சட்டமூலத்தில் குறிப்பிட்டுள்ளதே அரசின் உள்நோக்கத்தைத் தெளிவுபடுத்தப் போதுமானது.


இந்தச் சட்டமூலத்தின் மூலம் முற்றிலும் பாதிக்கப்படப் போவதும், அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளதும், நெருக்கடிகளைச் சந்திக்கப்போவதும், பல்வேறுவகையில் பழிவாங்கப்படப்போவதும் தமிழ் மக்களே... அதுவும், தமிழ்த் தேசிய உணர்வும், இன உணரவும் கொண்ட தமிழ் மக்களே என்பதுதான் பீதியைத் தரும் விடயமாகும்.

தமிழ் மக்களது அபிலாஷைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஒரு அடிதானும் எடுத்து வைக்காத இந்த அரசாங்கம், இந்தச் சந்தர்ப்பத்தில் மனிதாபமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு - பல்வேறு பொது அமைப்புகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசுகள் மற்றும் தனிநபர்கள் போன்றவற்றின் நிதியுதவியுடன் இயங்க ஆரம்பிக்க உள்ளதாக அரச தரப்பாலேயே கூறப்பட்டுவரும் நிலையில், இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளமையானது பலமான சந்தேகங்களை ஏற்படுத்தவே செய்கிறது என்பதை இந்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் குறிப்பிட்டதும் சரியானதேயாகும்.

தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக்கான, நியாயமான போராட்டத்தைப் பயங்கரவாத நடவடிக்கையாக இதே கதிர்காமரைக் கொண்டு உலகெங்கும் பிரசாரப்படுத்த முயன்றதை எவரும் மறக்கமாட்டார்கள்.

இந்தவகையில் பார்த்தால், தமிழ்மக்கள் மீதும், எழுச்சி கொண்டுவரும் தமிழ்த் தேசியத்தின் மீதும், அதற்கு ஆதரவாக உலகெங்கும் பெருகிவரும் ஆதரவின் மீதும் புதிய ஒடுக்குமுறையை மேற்கொள்ளவே இந்தச் சட்டமூலம் அமுல் செய்யப்பட்டுள்ளது என்ற தமிழ் மக்களின் கருத்துநிலை மிகச் சரியானது என்ற யதார்த்தத்தை அதன் செயற்பாடுகள் விரைவில உணர்த்தியே தீரும்.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி உதவித் தடுப்பும்; பொதுக்கட்டமைப்பும்!

பயங்கரவாதிகளுக்கு நிதியுதவி அளிப்பதைத் தடுக்கும் ஒரு சட்டமூலம் இலங்கை நாடாளுமன்றத்தில் அவசரமாகக் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமூலத்தை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொண்டு வந்தார். இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக அரசாங்கத்துடன் சேர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. வாக்களித்திருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ்ப் பிரதிநிதி தி.மகேஸ்வரன், தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் எதிர்த்து வாக்களித்திருக்கின்றனர்.

இந்தச் சட்டமூலத்தைக் கொண்டு வந்த அமைச்சர் கதிர்காமர், இரண்டாயிரமாம் ஆண்டு ஜுலை மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் பயங்கரவாத அமைப்புக்களுக்கு நிதிவழங்குவதைத் தடைசெய்யும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது பற்றி எடுத்துரைத்திருக்கிறார் என்று நண்பர் பரமசிவம் சொன்னார்.

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயக வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களுக்கு வெளிநாடுகள் மனம் இரங்கிக்கொடுத்த உதவிகளைப் பகிர்ந்து கொடுப்பதற்குப் பெரும் சர்ச்சைகளின் பின் இப்போதுதான் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப் பட்டிருக்கிறது.

இந்தக் கட்டமைப்பில் அரசாங்கத்தின் சார்பிலும், விடுதலைப் புலிகளின் சார்பிலும் இருவர் கையொப்பமிட்டிருக்கின்றனர். முஸ்லிம்கள் சார்பில் எவரும் கைச்சாத்திடவில்லை என்ற சர்ச்சை இன்னமும் தொட ர்ந்து கொண்டிருக்கின்றது. இதே சமயம் இக்கட்டமைப்பில் தெரிவிக்கப்பட்ட மூன்று அமைப்புக்களுக்கும் ஆட்கள் நியமிக்கப்பட்டு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அதாவது பொதுக்கட்டமைப்பு செயற்படுவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்படவில்லை. இச்சமயத்தில் கதிர்காமர் பயங்கரவாதிகளுக்கு நிதி உதவி செய்வதைத் தடுக்கும் சட்டமூலத்தைக் கொண்டுவந்திருக்கிறார். இதற்கு ஏதோ பின்னணி இருப்பதாகத்தான் தோன்றுகிறது என்றேன்.

நீர் சொல்வதுபோலத்தான் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்தச் சட்டமூலத்தின் மீது நாடாளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

குமார் பொன்னம்பலம் நாடாளுமன்றம் போகா விட்டாலும், அவரது இடத்தை நிரப்பியிருக்கும் அவரது மகன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என்ன சொல்லியிருக்கிறார் என்று கேட்டேன்.

தமிழ் மக்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்காக இதய சுத்தியுடன் ஆக்கபூர்வமாக ஒரு அடிகூட முன்னோக்கி எடுத்து வைக்காத இந்த அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தில் பயங்கரவாதத்துக்கு நிதி சேகரித்தலைத் தடுப்பதற்கான இந்தச் சட்டமூலத்தைக் கொண்டு வருவது பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்திருக்கிறது என்று கஜேந்திரகுமார் கூறியிருக்கிறார்.

உலக பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காகவே இச்சட்டமூலத்தைக் கொண்டுவருவதாக அரசு தெரிவிக்கின்றது. ஆனால், தமிழ் மக்களது அடிப்படைக் கோரிக்கையான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஆயுத பலம் கொண்டு அடக்கிக்கொண்டு அக்கோரிக்கையைப் பயங்கரவாதம்போல உலகுக்குக் காட்டமுயல்கிறது.

எமது சுயநிர்ணய உரிமைப்போராட்டத்துக்குத் தீர்வுகாணாமல் இச்சட்டமூலம் கொண்டுவரப்பட்டதில் சந்தேகம் ஏற்படுத்துகிறது என்று கஜேந்திரகுமார் கூறியிருக்கின்றார் என்று பரமசிவம் எடுத்துச் சொன்னார்.

பயங்கரவாதம், பயங்கரவாதம் என்று சொல்கிறார்கள், உலகில் எங்கே பயங்கரவாதத் தாக்குதல் நடந்தாலும் இங்கே பயங்கரவாதம் பற்றி அறிக்கையும், அனுதாபச் செய்தியும் வெளியிடுகிறார்கள். மொட்டந் தலைக்கும் முழுந்தாளுக்கும் முடிச்சுப் போட்டுப் பயங்கரவாதம் என்கிறார்கள்.

பயங்கர வாதம் எப்படி ஆரம்பித்தது? இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? உலகப் பயங்கரவாதத்தை விடுவோம். இங்கே பயங்கரவாதம் எப்படித் தொடங்கியது. இங்கே முதலில் அரச பயங்கரவாதமே தலையெடுத்தது. ஆயுதப் படைகளின் அட்டூழியங்கள் தாங்காமல்தானே அதைத் தடுப்பதற்கும், எதிர்ப்பதற்கும் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். 1971ஆம் ஆண்டில் ஜே.வி.பி. ஆயுதம் ஏந்தி ஆட்சியை ஆயுத முனையில் ஏற்படுத்த முயன்றார்கள்.

அதைப் பயங்கரவாதம் என்று சொல்கிறார்களில்லை. இங்கு தமிழ் மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழமுடியாமல் ஆயுதப் படைகள் அமைதியாக வாழ்ந்த மக்களை அடக்கி ஒடுக்கி அழித்தொழிக்க முற்பட்டபோதுதானே தமிழ் மக்களையும், தமிழ் மண்ணையும் பாதுகாப்பதற்காக ஆயுதம் ஏந்தினார்கள்.

இவர்கள் தற்காப்புக்காக ஏந்திய ஆயுதம் பின்னர் தமிழ் மக்களின் விடுதலைக்காக உபயோகிக்கப்பட்டது. இது பின்னர் விடுதலைப் போராட்டமாக வளர்ந்தது. இன்று தமிழர் தாயகத்தில் பெரும் பகுதி விடுதலை பெற்றுச் சுதந்திர பூமியாக விளங்குகிறது என்று நான் விளக்கம் சொன்னேன்.

மக்களை அடக்கி ஒடுக்கித் தங்களது சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முற்படும் ஆதிக்க சக்திகள் தமது உரிமைக்காகவும் விடுதலைக்காகவும் ஆயுதம் ஏந்திப் போராடும் மக்களையும் அதன் அமைப்புக்களையும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி உலகில் பிரசாரம் செய்வது வழமைதான்.

உலகநாடுகள் பல இதற்குச் சான்றாக உள்ளன. பயங்கரவாதிகள் என்று ஆதிக்க சக்திகளினால் முத்திரை குத்தப்பட்டவர்கள் பின்னர் விடுதலை பெற்றபின் அதே ஆதிக்கசக்திகளினால் தேசியத் தலைவர்கள் என்று வர்ணிக்கப்பட்டு வரவேற்கப்பட்ட காட்சிகளையும் இவ்வுலகம் கண்டு மகிழ்ந்ததுதான் என்று பரமசிவம் சொன்னார்.

கதிர்காமரை சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளும் அவர்களின் ஊடகங்களும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடத் தவறமாட்டா என்றேன்.

நோர்வேயை வெளியேறச் சொன்னதற்காக கதிர்காமரை சிங்கள, ஆங்கில ஊடகங்கள் இவரல்லவா வீரன் என்று புகழ்கின்றன. இனிச் சொல்லத் தேவையில்லை.

ஆனால், நாட்டின் நிலைமை நன்றாக இல்லை. கதிர்காமர் சொன்னதைக் கேட்காமலே நோர்வே வெளியேறவும் விடுதலைப் புலிகள் கொடுத்த காலக்கெடுவும் கதிர்காமரின் பயங்கரவாதத்துக்கு உதவுவதைத் தடுக்கும் சட்டமும் என்று எல்லாமாகச் சேர்ந்து போர்மேகம் பிய்த்துக் கொண்டு முழங்கிக் கொட்டப்போகுதோ என்னவோ? என்னதான் நடக்கும் நடக்கட்டுமே... என்று பாடிக்கொண்டு நடந்தார் பரமசிவம்.

இனப்படுகொலை நினைவாக...

கடந்தகால தமிழர் வரலாற்றில் பல படுகொலைகள், ஆக்கிரமிப்பு, வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. தமிழர்கள் என்ற ஒரே காரணத்தால், தொடர் அவலங்களையும், அழிவுகளையும் மக்கள் சந்தித்து வருகின்றனர். காலத்துக்குக் காலம் ஆட்சிப் பீடம் ஏறுபவர்களின் ஆட்சிக்கால ஆதரவுடனேயே இந்த அவலங்கள் அரங்கேறுகின்றன. இடம்பெயர்ந்து இறைவன் பாதம் இருந்தவர்கள், இன வெறியர்களின் தாக்குதலுக்கு இலக்காகி, இன்றுடன் பத்து வருடங்கள். நவாலி மண் இரத்தத்தால் தோய்ந்த ஜூலை 09 ஆம் திகதி நவாலி வாழ் மக்களை மட்டுமன்றி, தமிழ் மக்கள் அனைவரையுமே உறையவைத்த நாள்.

# உலக மக்கள் மனங்களையும் உறைய வைத்த நவாலிப் படுகொலை

- விஜேந்திரன் -

❖ உடைந்த கோயில் கதவுகளில் இறந்தவர்களைச் சுமந்து கொண்டு இடம் பெயர்ந்த மக்கள்.

❖ இறந்த தாயின் அரவணைப்பில் ஆறுமாதக் குழந்தை அழுகின்ற அவலம்.

❖ 45 நாளே ஆன பச்சிளம் பாலகன் உயிர் இன்றிக் கிடைத் தமை.

❖ ஒரே வீட்டில் இருந்த 13பேர் கொல்லப்பட்டமை.

❖ தன் குடும்பத்தையே இழந்து தனித்து விடப்பட்ட யுவதி.

இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன்னர் இலங்கை வான் படைக்குச் சொந்தமான விமானங்கள் நடத்திய மிகக் கொடூரமான தாக்குதலால் பலர் கொல்லப்பட்டதுடன், பெருமளவானோர் படுகாயமடைந்தனர். ஆண்டவன் பாதங்களில் அடைக்கலம் புகுந்த மக்களை இலக்கு வைத்து நடத்தப் பட்ட தாக்குதலால், 45 நாள் குழந்தை உட்பட 157 பேர் கொல்லப்பட்டனர். 360 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இவற்றுடன் பெருமளவு சொத்துகளும் அழிக்கப்பட்டன.

வலி. தெற்கு, வலி. தென் மேற்குப் பகுதிகளை இலக்கு வைத்து, இலங்கை இராணுவத்தினர் முன்னேறிப் பாய்தல் இராணுவ ஆக்கிரமிப்பை மேற் கொண்டனர். இவர்களுக்கு உதவியாக பலாலி, அளவெட்டி இராணுவ நிலைகளிலிருந்து சரமாரியான எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனால் இடம்பெயர்ந்து நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்திலும், சின்னக் கதிர்காம முருகன் ஆலயத்திலும், பாடசாலையிலும் தஞ்சமடைந்தனர். நவாலி வாழ்மக்கள் இவர்களுக்குப் பல்வேறு வழிகளில் உணவு, உடுபுடவை என தம்மாலான உதவிகளைச் செய்தனர்.

உறைவிடங்கள், உடைமைகளை விட்டு அல்லற்பட்டு வந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்து, ஆறு தல்படுத்தியதை பொறுத்துக் கொள்ளாத அரச வான்படை - சென்பீற்றர்ஸ் தேவாலயத்திலும், அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் விமானக் குண்டுத் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலால் வலிகாமத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த 157 பேரைப் பலி கொண்டது. இதில்48 பேர் மக்கள் பணியில் தொண்டாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

360 இற்கும் மேற்பட்டவர்களுக்கும் அழியாத வடுக்களை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தால் இரண்டு ஆலயங்கள், பாடசாலை ஒன்று, 13 வீடுகள், 04 கடைகள் பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன் பல பயன்தரு மரங்களுடன், கால் நடைகளும் அழிக்கப்பட்டன.

மிலேச்சத்தனமான இந்தக் கொடூரத் தாக்குதலால் தம் உறவுகளை இழந்தவர்களும், தம்மிடங்களில் அழியாத வடுக்களைச் சுமந்துள்ளவர்களும் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள்.

ஒரு தசாப்த காலத்தைக் கடந்து விட்டும்கூட, உள்ளத்தோடும், உதிரத்தோடும் உறைந்து விட்ட சம்பவமாக இதைக் கருதுகிறேன். இவ் வாறு தன் கருத்தை ஆரம்பிக்கிறார் நவாலி சென்பீற்றர்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாட சாலை அதிபர் சிறில் சுகந்திரன்.



இளைப்பாறுவதற்காக தங்கியிருந்த மக்களுக்கு உதவிகளைச் செய்து கொண்டிருந்தோம். என் வாழ்க் கையில் மிகப்பயங்கரமான, துக்கமான நிகழ்வாகவே அதைக் கூறமுடியும்.

பாடசாலையில் இருந்து மாலை 3.30 மணி போல வீட்டுக்குச் சென்றேன் பாய் எடுப் பதற்கு. பாயுடன் திரும்பி வரும் போதே இந்தக் கொடூரம் நிகழ்ந்தது. சமைத்த சோறு போடுவதற்கென கொணர்ந்த பாயில் உயிரற்ற உடல்களைத் தூக்கிச் சென்றோம்.

ஒருவரை ஒருவர் பார்க்க முடியாதளவுக்கு ஒரே புகை மண்டலமாக காட்சியளித்த பாடசாலை, தேவாலய வளாகம், அதைச்சூழவுள்ள வீதிகள் இவற்றிலிருந்து அவலக் குரல்களுடன், உதவிக் குரல்களும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது. இந்தப் பகுதியில் உடல் அவயங்கள் சிதறிக் கிடக்க, அவயங்களை இழந்து உயிருக்காகப் போராடியவர்களின் உடல்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தன. இவற் றைப் பார்த்தவுடன் அப்படியே நின்று விட்டேன். என்னால் என்ன செய்வதென்றே தெரியவில்லை.

காப்பாற்றுங்கள் தண்ணீர்.. தண்ணீர்.. என்ற அவலக்குரல் இன் றும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அகோரத் தாண்ட வத்தால் இரத்தக் கறை படிந்த இந்த நாளை, எமது பகுதி மக்கள் வருடா வருடம் நினைவு கூர்ந்து வருகின்றனர். எவர் எந்தக் காரணத்தை முன் வைத்தாலும் ஏற்க முடியாது. எவருக்கும் எவரும் எதனையும் விளைவிக்கலாம் என்ற இன வாத அரசுகளின் கோரமுகம் நிரூபணமாகிறது என அன்றைய காட்சியை கவலை தோய்ந்த முகத்துடன் விபரித்தார்.



படுகாயமடைந்து உயிர் மீண்ட கிறிஸ்தோ- பவுலின் (வயது-62) தனக்கேற்பட்ட அவலத்தைத் தெரிவிக்கையில்-

கோயிலுக்குப் பக்கத்திலுள்ள உறவினர் வீட்டில் இருக்கேக்க தான் விமானங்கள் குண்டுத்தாக்குதல்களை நடத்தின. வீடே அதிர்ந்தது. ஓடுகள், மரங்கள் முறிந்து எங்களுக்கு மேல் விழுந்தது. அப்பொழுது... குண்டின்ர ஒரு துண்டு எனக்குப்பட்ட மாதிரி இருந்தது. பார்த்தால் ஒரே இரத்தம், பெருஞ்சிரமத்தின் மத்தியில் ஆஸ்பத்திரிக்குப் போனோம். ஆஸ்பத்திரி எங்கும் அழுகுரல்களும், இரத்தம் தோய்ந்த உடல்களும் தான். உறவுகளைத் தேடித்திரிந்த உறவினர்கள், காயப்பட்டவர்களின் அழுகுரல்கள், ஆஸ்பத்திரியே மயான பூமியாகக் காட்சியளித்தது. எங்கு பார்த்தாலும் அவலம் தோய்ந்த அழுகுரல் களையே அவதானிக்க முடிந்தது. எமது பகுதியைப் பாதித்த எம்மவர்களைப் பந்தாடிய இன்றைய நாளை இங்குள்ளவர்கள் இறுதிவரை மறக்க மாட்டார்கள் என தன் நெற்றியைத் தடவி காயத்தைக் காட்டினார்.

சிவசோதிராஜா - நாகேஸ்வரி (வயது -47)தன் அனுபவத்தை தெரிவிக்கையில் -


பெரிய குண்டுச் சத்தம் கேட்டவுடன், நிலத்தில் விழுந்திட்டோம். பிறகு எழும்பிப் பாக்கேக்க, பிள்ளைகள் இரண்டு பேர் இரத்தக் காயத்துடன் வந்தார்கள். அவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டு, எனர மூத்த மகனைத் தேடினேன். ஆனால் என்னால் என் மகனைக் காண முடியவில்லை.

இந்தக் கொடூரத்தால் 9 வயதான பிரசன்னாவையும், மருமகளான 8 வயது தனுசாவையும் பறிகொடுத்தோம்.

என் மகன் போயிருந்த வீட்டில் 13 பேர் கொல்லப்பட்டனர். ஒருவர் தான் காயத்துடன் தப்பினார். எனது மகன் கடசியாக அல்பம் பார்த்துக் கொண்டிருந்தானாம். அந்த இடிபாடுகளுக்கு இடையே அந்த அல்பத்தையே எங்களால் காண முடிந்தது. எனது மகன் வருவான் என்ற மனநிலையில் இருந்த நாங்கள் - மகனது உடலைக் கூடக்காணாத பாவிகளாகப் போயிற்றம். இப்படியான அவலத்துக்குப் பயந்து, இந்தியாவுக்குச் சென்று, கடந்த வருடமே ஊருக் குத் திரும்பினோம். தம்பி நல்லாப் படிப்பான். பண் ணிசைப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம் பெற்றமைக்கான சான்றிதழ் கூட, இந்த அவலத்துக்குப் பின்னரே அனுப்பியிருந்தார்கள். ஏதோ ஒரு வகையில் சமூகத்துக்காக உழைக்கக் கூடிய கல்வியாளர்களை. மிக நல்ல மனிதர்களை இழந்துள்ளோம்.

எமது பகுதி வாழ் மக்களின் மனங்களில் அழியாத வடுவாக இடம் பெற்ற இரத்தம் தோய்ந்த இந்தநாளை மறக்கவே முடியாதென. அன்றைய துயர நிகழ்வைப் பகிர்ந்து கொண்டார்.

அருளம்மா - அன்ரனிதாஸ் (வயது 50)அன்றைய கொடூர நிகழ்வு தொடர்பாகத் தெரிவிக்கையில் -



வழிபாடு செய்ய கோயிலுக்குப் போனாங்கள். அங்க இருந்த சனத்தைப் பாத்திட்டு, அவர்களுக்குச் சாப்பாடு கொடுக்க வேணும் என்ற நிலையில் எமது பகுதி மக்கள் இணைந்து சமைக்கும் போதே இந்த அநியாயம் இடம்பெற்றது. பிளேனில் இருந்து பேப்பர் வருமாப் போல இருந்தது. பேந்து பாத்தா தொடராகக் குண்டுகள் வெடித்தன. எங்கும் புகை மண்டலமாக இருந்தது. எங்கும் அவலக்குரல்.

அனைவருமே அல்லோலகல்லோலப்பட்டுத் தம் உறவினர்களைத் தேடியவர்களும், இறந்தவர்களை மடியில் வைத்து அழுபவர்களும், அவயங்களை இழந்து உயிருக்காகப் போராடுபவர்களும் எனப் பார்க்கும் இடமெல்லாம் இரத்தம் தோய்ந்த மக்கள். எனது 5 வயது மகளான அஸ்விக்காவைத் தேடினேன். படுகாயமடைந்த நிலையில் பின்பக்கம் கிடந்த மகளைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனோம். ஆஸ்பத்திரியிலும் அவலம். எங்கும் எங்கட ஆட்கள் தான். என்ன செய்கிறதென்றே தெரியேல்ல.

எமது பகுதியில் தஞ்சடைந்த மக்களுக்கு ஏன் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டது என, இன்றும்தான் யோசிக்கிறோம். இனிவரும் காலங்களில் இப்படியான அசம்பாவிதங்கள் இடம் பெறக்கூடாதென இறைவனிடமே கேட்கவேண்டும். இதால பாதிக்கப்பட்ட மக்களை ஏதோ ஒரு வகையில் ஆற்றுப்படுத்தி வருகிறோம். அமைதியான ஆறுதலை இறைவன் கொடுக்க வேணுமென்றார்.

இறந்தவர்களின் உடல்களுடன், இடம்பெயர்ந்து சென்ற துயர நிகழ்வு இடம்பெற்று, இன்றுடன் பத்து வருடங்கள் ஆகின்றன. அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் பாரியளவில் அலங்கோலங்கள் இடம்பெற்ற போதும், ஆறுதல் தேடிப் போனவர்களை அடித் துக் கொன்றது நவாலியில் தான்.

சென். பீற்றர்ஸ்வளாக வீதியிலும், நவாலி வடக்கு புலவர் வீதியிலும் இறந்தவர்களுக்கான நினைவுத்தூபி அமைக்கப்பட்டுள்ளது. விமானத்தாக்குதலில் எச்சங்களாக பலர் காயப்பட்ட வடுக்களுடனும், அவயங்களை இழந்தவர்களாகவும் உள்ளனர். இந்தத் தாக்குதலின் அகோரத்தை இன்றும் பறைசாற்றி நிற்பது - வேலிக்கு அடைத்த தகரம் தேவாலய வளாகத்தி லுள்ள வாகைமரத்தில் தொங்கியிருப்பது அகோரத் தாண்டவத்தை அம்பலப்படுத்துகிறது.

ஒவ்வொரு வருடமும் சென் பீற்றர்ஸ் தேவாலயத்திலும், சின் னக் கதிர்காமமுருகன் கோவிலிலும் நினைவுகூரும். வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இன்று பத்து வருடங்களை நினைவு கூரும் முகமாக தேவாலயத்தில் இறந்தவர்களின் படங்கள் வைத்து அஞ்சலி செலுத்துவதுடன்,

பத்து மெழுகுதிரிகளையும் ஏற்றவுள்ளனர். இரத்தக் கறை படிந்த இன்றைய நாளை நவாலி வாழ் மக்கள் மறக்கவோ, இந்த குற்றத்தைப் புரிந்தவர்களை மன்னிக்கவோ மாட்டார்கள் என்பது, அவர்களுடன் உரையாடியதில் இருந்து உணர்ந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

ஜூலை - 09

# தமிழ்ச் சிறுவர்களின் குருதியின் மூலம் தம்மபதம் மீள் பதிப்புச் செய்யப்பட்ட நாள்

பகுதி -I



1990 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி இலங்கை அரசும் ஒப்பமிட்டு ஏற்றுக் கொண்ட சர்வதேச சிறுவர் சமவாயத்தில்அடங்கியிருக்கும்54 உறுப்புரைகளில், மூன்றாவது உறுப்புரையின் பந்தி 3.2 பின்வருமாறு கூறுகிறது.

'அரச தரப்பினர் பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு அவசியமான பாதுகாப்பையும், பராமரிப்பையும் உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்...' எனக் குறிப்பிட்டுச் செல்கிறது. பொதுவாகவே இந்தச் சிறுவர் உரிமைகள் பற்றிய சமயவாயமானது - தனது அனைத்து உறுப்புரைகளினூடாகவும் சிறுவர்களின் உரிமைகளுக்கும், அவர்களுக்கான விசேட பாதுகாப்புக்கும், ஏற்பாடுகளைச் செய்திருப்பதோடு, ஆயு தப் பிணக்குகள் இடம் பெறும்போது, பிள்ளைகளை இலக்குவைப்பதையும், சர்வதேசச் சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட பாடசாலைகள், மருத்துவமனைகள், ஆலயங்கள் போன்ற பிள்ளைகள் கூடும் இடங்கள் மீது தாக்கு தல்கள் நடத்துவதையும் கண்டித்து நிற்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் தொடர்பான நெறிமுறை விதிகளின் பிரிவு 3 விதி 10 பின் வருமாறு கூறுகிறது.

'ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் உயிர் வாழும் உரிமை இயல் பாய் அமைந்த தொன்றாகும். அதனைச் சட்டத்தின் மூலம் காத்தல் வேண்டும். எவரின் உயிரையும் நியாயமின்றி அபகரித்தலாகாது. உள்நாட்டில் இடம் பெயர்ந் தவர்கள் பின்வருவனவற் றில் இருந்து விஷேடமாகப் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாவர்.'

அ. இனக்கொலை ஆ. படுகொலை

இ.நீதி, நியாயமின்றி தன் முனைப்பாகச் சாகடித்தல்.

- சந்துரு -

இலங்கை ஒரு பௌத்த நாடு என்றும், தம்மபதத்துக்கு கௌரவம் அளித்து, அதனை அடியொற் றியதா கவே அரசாட்சி நடத்தப்படுவதாகவும் கூறி, சர்வதேச ரீதியில் தன்னை ஒரு தூய பௌத்த நாடாகக் காட்டப் போராடி வரும் சிங்களதேசம் கூறும் அறத்தை அத்திவாரமாகக் கொண்ட தம்மபதத்தின் ஒரு சுலோகம் பின்வருமாறு கூறுகிறது.

'உயிர்க் கொலை செய்பவர், பொய் கூறுபவர், களவு எடுப்பவர், பிறர் மனை நயப்பவர், போதை யூட்டும் பானங்களைக் குடிப்பவர் எவராயினும் சரி, அவர்கள் மனிதர்களிடையே இருந்து ஒதுக்கி விடக்கூடியவர்கள்.

உள்நாட்டிலுள்ளும், சர்வதேச ரீதியிலும், அறம் சார்ந்த நிலைக்கு அப்பாட்பட்ட, சட்டபூர்வமான வகையிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் வரையறுக்கப்பட்டிருந்த நிலையிலேயே, 1995 ஆம் ஆண்டு இதே நாளில் நவாலித் தேவாலயத்தையும், அதனை அண் டிய பாலர் பாடசாலை, மற்றும் வீடுகளையும் இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டு வீச்சின் மூலம் முப்பத்தியெட்டுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் உட்பட, இடம் பெயர்ந்து வந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள தஞ்சம் புகுந்திருந்த 157 அப்பாவித் தமிழர்களது உயிர்களைச் சிங்களப் படைகள் அழித்தனர்.

1995 ஆம் ஆண்டு தமிழர் தேசத்தின் மீது பதித்து விட்டுச் சென்ற சோக வரலாற்றுப் பதிவுகளுள் ஒன்றே 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையாகும். வழமையைப் போலவே தமது இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கி, பிறகே ஊரட ங்குச் சட்டத்தை சட்ட பூர்வமாக அறிவிக்கும் இலங்கை இராணுவம் 1995 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி காலையில் கூட, காலை ஆறு மணிமுதல் கால வரை யறையற்ற ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்திருப்பதாக அறிவிக்கும் முன்னரேயே தனது இராணுவ நடவடிக்கையைத் தொடங்கி விட்டது.

வலிகாமம் வடக்கு , மேற்குப் பகுதிகளை நோக்கி இடைவிடாத ஷெல் வீச்சும், புக்காரா விமானக் குண்டுத் தாக்குதல்களும் அன்று அதிகாலையிலேயே இராணுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்டன. இந்த அகோரக் குண்டு வீச்சு, ஷெல்தாக் குதலுக்குப் பயந்து , அந்தப் பகுதி மக்கள் தமது வீடுகளிலேயே பதுங்குழியினுள்ளும், பாதுகாப்பெனத் தாம் கருதிய இடங்களிலுள்ளும் பதுங்கிக் கொண்டனர். ஷெல் வீச்சு ஓரளவு குறைவடைந்ததும் நெல்லியான், மூளாய், சுழிபுரம், பறாளை, பண்ணாகம் , ஆகிய பகுதிகளிலிருந்து, அந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வட்டுக் கோட்டை, மாவடி, சங்கரத்தை ஆகிய பகுதி களுக்கு வந்து தெரிந்தவர்களது வீடுகள், பாடசாலைகள், கோயில்கள், ஏன் மரநிழல்களில் கூட தங்கியிருந்து - இவர்கள் தமது பயத்தையும், பதட்டத்தையும் ஓரளவு தணித்துக் கொண்டனர்.

அன்று பிற்பகல் தாழப் பறந்து சாகசம் காட்டிய புக்காரா விமானம் ஒன்று, வட்டுக்கோட்டைச் சந்தி யில் நான்கு குண்டுகளைப் போட்டு விட்டுச் சென்றது. இதனைத் தொடர்ந்து , ஏற்கனவே வேறு இடங்களில் இருந்து இந்தப் பகுதிகளுக்கு வந்து தங்கியி ருந்த மக்களும், அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களும் சேர்ந்து, சுமார் ஒரு லட்சத்துக் கும் அதிகமான மக்கள் கூட்டம் நவாலியூடாக யாழ். நகர் நோக்கி, நிரைநிரையாக நடக்கத் தொடங்கினர். வயல் வெளிகளுக்கூடாகவும், ஒழுங்கைகள் வீதிகளுக்குக் கூடாகவும், மூட்டை முடிச்சுக்களோடு, நடக்க இயலாத முதியவர்களையும், அங்கவீனர்களையும் சுமந்தபடி தேவால யத்தைச் சூழ இருந்த கடை ஓரங்களிலும், வீடுகளிலும், பாலர் பாடசாலையிலும் காலாறத் தங்கிக்கொள்கின்றனர். சில தனிப்பட்டவர்களது தன் னார்வ முயற்சிகளால் அவ்வாறு வந்து தங்கியிருப்பவர்களுக்கு, கஞ்சி, பாண், தேநீர் என் பன வழங்கப்பட்டன.

சில்லாலைப் பகுதி கிராம சேவையாளரான கபிரியேல் பிள்ளையும், நவாலிப் பிரதேசத் தின் கிராம சேவை யாளர்களுள் ஒருவரான ஹேமலதா செல்வ ராசாவும், இன்னும் சில தொண்டர் களுமாகச் சேர்ந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான உடனடி நிவாரண வழங்களுக்குரிய ஏற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். வெயிலில் நடந்து வந்த களைப்பு, பசிக்கொடுமை, பயப்பீதி, உறவுகளை தவறவிட்ட ஏக்கம், கவலை, போன்றன காரணமாக, குழந்தைகளும், சிறுவர்களும் தத்தமது பெற்றோருக்கு, உறவினர்களுக்கு அருகிலே இருந்து அழுது கொண்டிருக்கின்றனர். உதவி கோருபவர்களும், உதவி செய்பவர்களும், பசியால் அழும் குழந்தைகளும் எழுப்பிய சத்தத்தில், சற்றுத் தள்ளியே விழுந்து வெடிக்கும் ஷெல்களின தும், குண்டுகளினதும் சத்தம் அந்த இடத்தில் பெரிதாகக் கேட்கவில்லை.

இந்த நிலையில் மாலை 4.30 மணியளவில், இந்தப் பகுதியின் மேலாகப் பறந்த புக்காரா விமா னம் ஒன்று, உயரத்தில் பறந்த படியே அடுக்கடுக்காக ஆறு குண்டு களைப் போட்டது. இடம் பெய ர்ந்து வந்து இளைப்பாறிய - பசியால் அழுத பால கர்கள் உட்பட, நூற்றுக்கும் மேற்பட்ட மனித உடல்கள் சிதறுண்டு பலியாகின. தேவாலயப் பகுதியைச் சூழ விருந்த கட்டடங்கள் இடியுண்டு வீழ்ந் தன. குண்டு வீசிப் புக்காரா அகன்றதும், அந்த இடத்துக்குச் சென்ற இளைஞர்களும், விடுதலைப் புலிகளும் இரத்தம் பீறிட, சிதறிக் கிடந்த உடல் களையும், அவயங்களையும் சேகரித்து உழவுஇயந்திரங்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் யாழ். வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

(தொடரும்...)

# லண்டனில் மீண்டும் பாரிய தாக்குதல் இடம்பெறலாமென மக்கள் அச்சம்!

லண்டன் —

லண்டனில் நேற்று முன்தினம் காலை அடுத்தடுத்து நான்கு இடங்களில் குண்டுகள் வெடித்ததில் 50 பேர் உயிரிழந்ததுடன் 700க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். 3 சுரங்கப்பாதை ரயில் மற்றும் ஒரு மாடி பஸ்ஸில் நடத்தப்பட்ட இந்த குண்டு வெடிப்பு தாக்குதல் லண்டன் நகர மக்களை பீதியில் உறையவைத்துள்ளது.

தொடர் குண்டுவெடிப்புக்கு அல் கொய்டாவுடன் இணைந்து செயற்படும் ஒரு இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. குண்டுகள் வெடித்ததும் லண்டன் முழுவதும் பஸ், ரயில் உட்பட அனைத்துப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. இதனால் மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகினர்.

நேற்று முன்தினமிரவு பஸ் போக்குவரத்து தொடங்கப்பட்ட போதிலும் சுரங்கப்பாதை ரயில் போக்குவரத்து இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

முக்கிய இடங்களில் போடப்பட்ட தடைகளை பொலிஸார் நேற்று விலக்கினர். இதனால் மக்களிடையே மீண்டும் இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளது.

இந்த நிலையில் லண்டன் நகரில் தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற தகவல் வெளியாகியுள்ளது. இது லண்டன் மக்களை பீதியில் ஆழ்த்தியுள்ளது. முக்கிய வீதிகளில் வழக்கமான கூட்டமில்லை.

தீவிரவாதிகள் எந்த ரூபத்திலும் வந்து தாக்கக்கூடும் என்ற பரபரப்பு நிலவுகிறது. இதையடுத்து லண்டனில் முக்கிய இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் பார்வையாளர்கள் தடை செய்யப்பட்டுள்ளனர்.

தொடர் குண்டுவெடிப்பு நடத்திய தீவிரவாதிகள் லண்டன் நகருக்குள்தான் பதுங்கியிருப்பதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அவர்களை தப்ப விட்டு விடக்கூடாது என்பதற்காக விமானநிலையங்கள் மற்றும் லண்டனை இணைக்கும் வீதிகள் சீல் வைக்கப்பட்டுள்ளன. வாகன சோதனை உட்பட அனைத்து சோதனைகளும் தீவிரமாக நடந்து வருகிறது.

தீவிரவாதிகளைப் பிடிக்க பாரியளவில் தேடுதல் வேட்டையும் நடந்து வருகிறது. லண்டனில் சந்தேகிக்கப்படும் அனைத்து இடங்களிலும் அதிரடிச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இதுவரை தீவிரவாதிகள் தொடர்பாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் காயமடைந்த அனைவரும் மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில் 40 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது. அவர்கள் யார் யார்? என்று விசாரணை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தொடர் குண்டுவெடிப்பில் தற்கொலைப்படை தீவிரவாதிகள் ஈடுபடவில்லை என்று தெரியவந்துள்ளது. குண்டுகளை எடுத்து வந்து வைத்து விட்டுச்சென்றுள்ளனர்.

அந்த குண்டுகள் காலை 8.51 மணிக்குத் தொடங்கி 9.47மணி வரை சுமார் 56 நிமிடங்களுக்கு அடுத்தடுத்து வெடித்துள்ளன. எனவே தீவிரவாதிகள் நன்கு திட்டமிட்டு இந்த தொடர் குண்டு வெடிப்பை நடத்தியுள்ளனர்.

ஐரோப்பாவில் இயங்கும் அல் கொய்டாவின் ரகசிய ஜிகாத் குழு இந்த சதிச் செயலில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இணையத்தளத்தில் இது தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது. குண்டுவெடிப்பு நடந்த இடங்களில் சிறிய துகள்களை எடுத்து தடயவியல் துறையினர் சேகரித்தனர்.

அதில் சக்தி வாய்ந்த வெடிமருந்து மற்றும் குண்டுகளை பிளாஸ்டிக் உறையில் அடைத்துக்கொண்டு வந்து வைத்துள்ளனர் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மார்ச் 11ஆம் திகதி மட்ரிட் நகரில் ஓடும் ரயில்களில் 10 பைகளில் இது போல வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்து 191 பேர் பலியாகினர். அதே பாணியில் லண்டனில் தொடர் குண்டுவெடிப்பு நடத்தப்பட்டுள்ளது.

லண்டனில் நடந்த தொடர் குண்டு வெடிப்புக்கும் உலகில் இதுவரை மற்றைய முக்கிய நகரங்களில் நடந்த குண்டு வெடிப்புக்களும் உள்ள ஒற்றுமை குறித்து சர்வதேச பொலிஸ் ஆய்வு நடத்திவருகிறது. இங்கிலாந்து பொலிஸார் கடந்த 30 ஆண்டுகளாக ஐரீஷ் கொரில்லா தாக்குதல்களை எதிர்கொண்டு திறம்பட சமாளித்து வருகின்றனர்.

ஆனால் முஸ்லிம் தீவிரவாதிகளின் அதிரடித்தாக்குதலை அந்த நாடு சந்தித்து இருப்பது இதுவே முதல் தடவையாகும். மீண்டும் அத்தகைய தாக்குதலை சந்தித்து விடக்கூடாது என்பதற்காக லண்டன் நகரம் முழுவதும் பொலிஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

## கைத்தொழில் அபிவிருத்தி சபையால் பொதுச்சேவை நிலையம் அமைப்பு!

யாழ்ப்பாணம் —

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ் மாவட்ட அலுவலகத்தால் கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வதிரி மற்றும் அல்லாரை பிரதேசங்களில் கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் வதிரியில் அமைக்கப்படவுள்ள பொதுச்சேவை நிலையத்திற்கென 20 பேர் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டு - தோற்பொருள் சம்பந்தமான மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது வதிரியில் தோற்பொருள் உற்பத்திக்கென பொதுச்சேவை நிலையம் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருக்கின்றன.

அவ்வாறே அல்லாரையில் தும்புத் தொழிற்சாலைக்கான பொதுச்சேவை நிலையம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இதில் ஈடுபடும் கைத்தொழிலாளர்களுக்கு இது தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்படுமெனவும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (20)

## க.பொ.த சாதாரண மாணவர்களுக்கு கணிதபாட முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம் —

யாழ் மாவட்டதில் எதிர்வரும் டிசெம்பர் கல்விப் பொதுதராதர சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ளமாணவர்களுக்கு கணிதபாட முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேசிய மட்ட ரீதியில் கடந்த சில வருடங்களாக கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் கணிதபாடத்தில் மாணவர்களின் அடைவு மட்டம் மிகவும் குறைவாகக் காணப்பட்டதனால் கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு முன்னோடியாக கணிதபாட பரீட்சை ஒன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய மேற்படி கணிதபாட முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளதாக வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்கு தடுப்பு மருந்து வழங்குவதை ஊக்குவிப்போம்

யாழ்ப்பாணம் —

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்கான தடுப்பு மருந்தேற்றல் யாழ்.மாவட்டத்தில் இன்று சனிக்கிழமை மற்றும் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய இரு தினங்களில் ஒரு வயது தொடக்கம் 10 வயது வரையான சகல பிள்ளைகளுக்கும் வழங்கப்படவிருக்கிறது. முதல் தடவையாக தடுப்பு மருந்து பெறுவோர் இரண்டு கட்டமாக 1 - 4 வார இடைவெளியில் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

### இலங்கையில் நோயின் தாக்கம்

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் - ஜப்பானிய என்சபலைட்டிஸ் அல்லது மூளை வீக்கம் எனும் பெயர்களால் அழைக்கப்படுகிறது. இந்நோய்க்கு பொதுவாக ஜப்பான் என்னும் அடைமொழி வழங்கக் காரணம் 1935 இல் ஜப்பானிய நோயாளியின் மூளையில் இருந்து வைரசு இனம் காணப்பட்டபடியினாலாகும்.

இலங்கையில் 60ஆம் தசாப்தத்தில் இது இருந்ததாக நம்பப்படுகிறது. ஆனால் 1968இல் தான் குறிப்பிட்ட வைரசுடன் இலங்கையில் நோயாளர்கள் இனம் காணப்பட்டனர். பின்னர் 1980களில் இலங்கையில் சுகாதாரப் பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டது. 1986/1987 இல் தொற்று நோயாக உருவெடுத்தது. இலங்கையில் அனுராதபுரம், பொலநறுவை பகுதிகளில் தீவிரமாக பரவி 385 நோயாளர்களையும், 64 இறப்புக்களையும் ஏற்படுத்தியது.

பின்னர் 1987/88 இல் நாட்டின் வேறு பல பகுதிகளுக்கும் பரவி 812 நோயாளர்களையும், 192 இறப்புக்களையும் ஏற்படுத்தியது. தற்பொழுது இலங்கையில் பல பாகங்களிலும் வருட இறுதியில் காய்ச்சலுடனும், தலைவலியுடனும் அதிக நோயாளர்கள் வைத்தியசாலை செல்கின்றனர். இவை ஜப்பானிய மூளைக்காய்ச்சலின் ஆரம்ப அறிகுறிகளாகும்.

ஆரம்பத்தில் காய்ச்சல், நடுக்கம், தலையிடி, ஓங்காளம், வாந்தி போன்ற அறிகுறிகளுடன் காணப்படும். பலர் குணமடைந்து விடுவார்கள். சிலரில் நோய் அடுத்த கட்டத்தை அடையும். இது மூளையைத்தாக்கும் நிலையாகும். உடல் நோ, மாறாட்டம், அங்கலாய்ப்பு, அறிவுகெட்ட நிலை, மனக்குழப்பம், வலிப்பு, தசைநார் இறுக்கம், நீர் இழப்பு, நிறை குறைதல், பேச்சில் வித்தியாசம் போன்ற அறிகுறிகளுடன் பின் குணமடையலாம். அல்லது நிரந்தர ஊன நிலை ஏற்படலாம். மரணமும் சம்பவிக்கலாம். உடலில் வைரசு சென்றால் எல்லோருக்கும் மூளைக்குச் செல்வதில்லை.

தரவுகளின்படி 200 தொடக்கம் 1000 பேருக்கு குருதியினூடாக உடலில் வைரசு சென்று அதில் ஒருவருக்கு மட்டுமே மூளைக்கு பாதிப்பு ஏற்படுகிறது. மூளையில் தாக்கநிலை அறிகுறிகள் தென்பட்டவர்களின் 25 வீதமானோர் மரணமடைகின்றனர். 50 வீதமானோர் மூளை பாதிக்கப்பட்டு உளநோய் அல்லது நரம்பு பாதிப்பினால் கை, கால் இயங்காத நிலை போன்ற நிரந்தர ஊன நிலைகளைத் தோற்றுவிக்கின்றன.

### நுளம்பு மூலம் கடத்தப்படும் வைரஸ் நோயாகும்

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நுளம்பு மூலம் பரப்பப்படும் வைரசு நோயாகும். இலங்கையில் "கியூலெக்ஸ், டிறைடையோ ரிஸ்காஸ்," "கியூலெக்ஸ் ஜெலிடெக்ஸ்" எனும்இனத்தைச் சார்ந்த பெண் நுளம்புகளால் பரப்பப்படுகின்றன. இவை பெரும்பாலும் மிருக குருதியை விரும்பி எடுப்பவை. மனித குருதியையும் எடுக்கும். இதன் சில இயல்புகள் வழமையாகப் பயன்படுத்தும் நுளம்பு அழித்தல் முறைக்கு சவாலாக அமைகின்றன. ஏனெனில் அதன் வாழ்விடம் வீட்டிற்கு வெளியில் இருப்பதால் வீட்டுக்கு இரசாயன மருந்துகளை விசுறுவதால் பயன் அளிக்காது போகிறது. மற்றும் வயல் போன்ற மனிதன் பாவிக்கக்கூடிய நீர் நிலைகளில் முட்டையிடுவதால் குடம்பி நிலையில் அளித்தலும் சாத்தியமில்லை. மற்றும் 1- 2 கி.மீற்றர் நீண்ட பறப்புத் தூரத்தைக் கொண்டவை போன்ற காரணங்களால் பாரிய அளவில் இரசாயனத்தைப் பாவித்து அழிப்பு செய்வது சாத்தியப்படாது உள்ளது.

பொதுவாக இந்த நோய் பரப்பும் நுளம்புக்ளைக் கட்டுப்படுத்த வயல் விதைப்புக் காலங்களில் நீர் முகாமைத்துவம், நீர் தேங்கி நிற்கும் குட்டைகளில் மீன் வளர்ப்பு ஆகியன மூலம் குடம்பி, கூட்டுப்புழுவை அழிக்க ஆலோசனை வழங்கப்படுகிறது. அத்துடன் நுளம்பு கடிப்பதைத் தடுக்க நுளம்புவலை, நுளம்புத் திரி போன்றவைகளைப் பாவிக்க ஊக்கப்படுத்தப்படுகின்றது.

மழைக்காலங்களில் பன்றிகளில், நாரை, கொக்கு போன்ற நீரில் சஞ்சரிக்கும் பறவைகளிலும், இந்த வைரசு நுளம்புகள் மூலம் கடத்தப்பட்டு பன்றிகளில், மிக அதிகமாக விருத்தியாகின்றன. வைரசின் களஞ்சியமாக இருக்கின்றன. பின்னர் நுளம்புகள் மூலம் மேலும் ஏனைய விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் கடத்தப்படுகின்றன. விலங்குகளில் நோய் அறிகுறிகள் தென்படுவதில்லை. பன்றிகளில் போன்று வீட்டில் இருக்கும் புறா, கோழி போன்றவற்றிலும் இவ்வைரசின் வாழ்க்கை வட்டம் அமைவதாக அண்மைய ஆய்வுகள் காட்டுகின்றன. மனிதனுக்கு நுளம்பு மூலம் மட்டுமே கடத்தப்படுகின்றது. வேறு வழிகளில் கடத்தப்படுவதில்லை. வீட்டுச் சூழலுக்கு அண்மையில் இருக்கும் பறவை இனங்களிலும் வாழ்க்கை வட்டத்தை இவ் வைரஸ் அமைத்துக் கொள்வதினால் அவை ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய ஆபத்துள்ளது.

சுகாதாரத்தை மேம்படுத்தும் மேலும் ஒரு நடவடிக்கையாக ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பு மருந்து வழங்கப்படுகிறது. சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவு இந்தத் திட்டத்தை அமுல்படுத்துகிறது. ஆரம்பத்தில் நோய் தீவிரமாகப் பரவிய மாவட்டங்களில் 1988 முதல் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. பின்னர் நோய் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் பரவியதால் தடுப்பு மருந்து வழங்கும் திட்டமும் விஸ்தரிக்கப்பட்டது. 2003 முதல் யாழ்.மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் பிரதான நோக்கம் நோய் ஏற்பட்டு மரணம் அல்லது மூளை பாதிக்கப்பட்டு ஊன நிலை ஏற்படுவதைத் தடுத்தல். இதற்காக நோய் ஏற்படக்கூடியவர்களின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உயர் அளவில் பேணுவதாகும்.

தடுப்பூசி இரு முறையாக வழங்கப்படும். ஆரம்ப நீர்ப்பீடனம், மேலதிக நீர்ப்பீடனம்.

ஆரம்ப நீர்ப்பீடனம் மூன்று தடவைகளிலும், மேலதிக நீர்ப்பீடனம் நான்கு வருடங்களின் பின்னும். வழங்கப்படும். வழங்கும் கால இடைவெளி பின்வருமாறு -

முதலாவது - ஒரு வயது (12 மாதம்) முடிந்தவுடன், இரண்டாவது - முதல் தடவை வழங்கி 1 தொடக்கம் 4 வாரங்களின் பின், மூன்றாவது - இரண்டாவது வழங்கி ஒரு வருடத்தின் பின், நான்காவது - மூன்றாவது வழங்கி நாலு வருடங்களின் பின்னருமாக வழங்கப்படுகின்றது.

தடுப்பு மருந்து வழங்கல் ஒருவயது முடிவிலேயே ஆரம்பிக்கப்படுகிறது. முதல் மருந்து வழங்கி 4 வார இடைவெளியினுள் இரண்டாவது முறையாக மருந்து வழங்கப்படல் வேண்டும். மூன்று தடவையில் குறிப்பிட்டுள்ள இடைவெளியில் தடைமருந்து வழங்கினால் பிள்ளைகளுக்கு நான்கு வருடங்கள் பாதுகாப்பு அளிக்கும்.

யாழ்.மாவட்டத்தில் இவ்வருடம் ஒரு வயது முதல் 10 வயது வரையான சகல பிள்ளைகளுக்கும் இரண்டு சுற்றுக்களில் தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது. முதல் சுற்று ஜூலை 9ஆம் திகதியும், இரண்டாவது சுற்று ஜூலை 23ஆம் திகதியும் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காவது தடவை வழங்கப்படும் மேலதிக மருந்து பாடசாலைகளில் வசதிக்கேற்ப கொடுக்கப்படவுள்ளது.

தடுப்பு மருந்து வழங்கிய பின்னர் எவ்வித பரிகாரமும் செய்யவேண்டியதில்லை. வழமையான உணவு உண்ணல், விளையாட்டுக்களில் ஈடுபடலாம். மிகமிக அரிதாக சிலருக்கு ஒவ்வாமை ஏற்படலாம். காய்ச்சல், ஊசி போட்ட இடத்தில் வீக்கம், தடிப்பு, எரிவு, நோ, உடலில் தழும்புகள், சொறி, வாந்தி, வயிற்றுவலி போன்றவை இருப்பின் அண்மையிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி, வைத்தியசாலை, பொது சுகாதார பரிசோதகர்கள், பொது சுகாதார மருத்துவ மாது, சுகாதார தொண்டர்களுக்குத் தெரியப்படுத்தவும்.

இந்தப் பயங்கரமான ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமாக வாழ இதற்கெதிராக தடுப்பு மருந்து வழங்குவதே பயன் உள்ளதாக இருக்கும்.

க.கஜீகரன்
சுகாதார கல்வி உத்தியோகத்தர்,
சுகாதார திணைக்களம்.
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுனாமி நிவாரண நிதிக்கு கிடைத்த பணம் எங்கே?

## கேள்வி எழுப்புகிறது ஐ.தே.க.!

கொழும்பு—

சுனாமி நிவாரணத்திற்காகக் கிடைத்த பணம் சம்பந்தமாக பிரதமர் எடுத்த நடவடிக்கை குறித்து விசாரணை நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி - ஜனாதிபதி சந்திரிகாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவென உள்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்தும் கிடைத்த சுமார் 82 மில்லியன் ரூபா பணம் சம்பந்தமாக பிரதமர் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னவென்று விரிவான விசாரணைகள் நடத்துமாறு ஐக்கிய தேசியக்கட்சி ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாபெரும் மக்கள் பேரணியில் கலந்து கொண்ட அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

82 மில்லியன் ரூபா பணம் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுள்ளாரா? இல்லையா? என்பது பற்றி பிரதமர் மகிந்த ராஜபக்ச இதுவரை எதனையும் தெரிவிக்கவில்லை.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து 7 மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை அந்தப்பணத்தை எதுவித நிவாரண நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தாதது ஏன் என்ற கேள்வியும் எழுவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# அடுத்த ஜனாதிபதி...

விக்கிரமநாயக்க, மங்கள சமரவீர டி.எம்.ஜயரத்ன, சரத் அமுனுகம, மைத்திரிபால சிறிசேன, நிமால் சிறிபால டி சில்வா, லக்ஷ்மன் கதிர்காமர், சுசில் பிரேம ஜயந்த, மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுருத்த ரத்வத்த ஆகியோர் அங்கம் வகித்திருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரை நியமித்து, மக்கள் போராட்டங்களை நடத்திவருகையில் - சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைதி காத்துவருவது சரியல்ல என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்து, ஏற்பாடுகளைக் கவனிக்க வேண் டும் என்றும் இந்தக் கூட்டத்தில் அமைச்சர் மங்கள சமரவீர வலியுறுத்தியதாகத் தெரியவருகிறது.

ஆனால், இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா -

இந்தச் சந்தர்ப்பத்தில் தலைமைத்துவம் பற்றி பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லையெனத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்து மக்கள் போராட்டங்களை நடத்தி வரு வதால் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் வேட்பாளரை அறிவித்துத் தேவையான ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும். அது தவிர தற்போது ஜனாதி பதியின் தலைமைத்துவம் பற்றி எவ்வித பிரச்சினையும் தங்களுக்கு இல்லை என்றும், இந்தச் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த பிரதமர், அமைச்சர் மங்கள சமரவீரவும் அவ்வாறானதொரு கருத்தையே முன்வைத்தார் என்றும் குறிப்பிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை இந்த ஆண்டு டிசெம்பர் மாதமளவில் அறிவிப்பதற்கு தான் திட்டமிட்டிருந்ததாகத் தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா - தற்போதைய நிலையில் ஜனாதிபதி வேட்பாளரை தாமதமின்றி அறிவிக்கவுள்ளதாக கூறியபோதும் வேட்பாளரைத் தெரிவுசெய்வதற்கென கட்சியின் ஒத்துப்போகாத, மூத்த தலைவர்களை நியமித்துள்ளார்.

இது வேட்பாளர் நியமனத்தை தாமதப்படுத்த சந்திரிகா எடுத்த நடவடிக்கை என்றே கூறப்படுகிறது.

# புலனாய்வுத்துறை...

ரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் - இராணுவப் புலனாய்வுப் பிரிவின் மேலும் சில அதிகாரிகளைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்ததாக இரகசிய பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண மற்றும் புலனாய்வுப் பிரிவின் மேஜர் ஒருவரையும் கப்டன் ஒருவரையும் கொலைசெய்வதற்கு இவர்கள் திட்டமிட்டிருந்ததாக - இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரியவந்தது.

கைதுசெய்யப்பட்ட சிங்கள வர்த்தகருக்குச் சொந்தமான நீலவர்ண ப்ளு போட் வாகனத்தில் சென்றே இவர்கள் தங்கள் திட்டத்திற்குத் தேவையான தகவல்களைச் சேகரித்தனர்.

இவர்களின் கொலை இலக்குப் பட்டியலில் இருந்த லெப்.கேணல் முத்தலிப்பை கொலை செய்வதற்கு இதற்கு முன்னர் 5 தடவைகள் சந்தேகநபர்கள் முயன்றதாகவும் தெரியவந்துள்ளது.

கொழும்பு - பொரளை கனத்தைக்கு அருகிலும், பௌத்தலோக மாவத்தையிலுள்ள விகாரைக்கு அருகிலிருந்தும் தமது இலக்கை அடைவதற்காக இவர்கள் காத்திருந்துள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்படவுள்ள மற்றொரு சந்தேக நபரான - தற்போது வெளிவராத பத்திரிகை யொன்றின் முக்கியஸ்தருக்குச் சொந்தமான வாகனத்திலேயே சந்தேகநபர்கள் தமது பயணங்களை மேற்கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

முத்தலிப் கொலை சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள், எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தம்மைக் கொண்டுசெல்கையிலும் காவலில் வைக்கும்போதும்விசேட பாதுகாப்பு வழங்குமாறு சந்தேகநபர்கள் நீதிவானிடம் வேண்டுகோள் விடுத்தனர். அதற்கமைய அவர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஹொரணை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். அதன் பின்னர் கங்கொடவில் நீதிமன் றத்தில் முத்தலிப் கொலைவழக்கின் கீழ் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இதேவேளை -

விடுதலைப்புலிகளுக்கு இராணுவம் இரகசியங்களை சில இராணுவ அதிகாரிகள் வழங்கி வருவதாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகளை இராணுவப் பேச்சாளர் மறுத்துள்ளார்.

லெப்.கேணல் நிசாம் முத்தலிப்பின் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது - சில இராணுவத்தினர் பணம் வாங்கிக்கொண்டு இராணுவ இரகசியங்களை வழங்குவதாகக் கூறியிருந்தார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்ததையேஇராணுவப் பேச்சா ளர் மறுத் துள்ளார்.

இது பாரதூரமான விடயம். இவ்வாறான செய்திகளை வெளியிட முன்னர் சம்பந்தப்பட்ட தரப்பிடம் சரியான தகவல்களைப்பெற்று அவற்றை உறுதி செய்த பின்னர் வெளியிடவேண்டும் எனவும் இராணுவப்பேச்சாளர் தெரிவித்தார். இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இராணுவ உயர்மட்டம் பரிசீலனை செய்துவருவதாகவும், இதுபற்றிய உண்மை பொய் கண்டுபிடிக்கப்படுமெனவும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## லண்டன்...

தகவல்களைப் பெற்றுக் கொள்வதாயின் உடனடி உதவி இணைப்பான 0044 2072621 841 அல்லது 0044 2072620875 என்ற இலக்கங்களுடனோ தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எனினும், நான்கு ஈழத்தமிழர்கள் இந்தக் குண்டு வெடிப்புக்களில் சிக்கி காயமடைந்ததாக நேற்றுச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தக் குண்டு வெடிப்புக்களில் 50 பேர் கொல்லப்பட்டதுடன்,1000 பேர்வரை காயமுற்றமையும் குறிப்பிடத்தக்கது.

NEW SCIENCE CENTRE
யாழ்.நகர்
DAY CLASS
→ துரித மீட்டல்
→ அலகு ரீதியான வினா விடை
→ மாதிரி வினாக்கள்
→ அச்சிடப்பட்ட பாடக் குறிப்புகள்
→ 5 MODEL PAPER
→ 20 இற்கு மேற்பட்ட கருத்தரங்கு
CHEMISTRY
By:- அன்பழகன் B.Sc
(சி-4273)

## அமெரிக்கா...

அமைக்கப்பட்ட சுனாமி நிவாரண சபைக்கு அமெரிக்கா தனது ஆதரவை வழங்குகிறது.

பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களினதும் ஒத்துழைப்புடன் இந்தக் கட்டமைப்பு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுமானால், டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட மாபெரும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அனைவரினதும் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப இது உதவும் என அமெரிக்கா நம்புகிறது.

சட்டரீதியான கட்டுப்பாடுகள் காரணமாக சுனாமி நிவாரண சபையுடன் இணைந்த நம்பிக்கை நிதியத்துக்கு அமெரிக்கா பங்களிப்பு வழங்காது . சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக அமெரிக்கா 130 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் புனரமைப்புத் திட் டங்களுக்கு இந்த நிதியிலிருந்து ஒரு பகுதி வழங்கப்படும். வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் இந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் புனரமைப்புத் திட்டங்களை மேற்கொண்டுவருகின்றன. மேலும், அமெரிக்கா இந்த நம்பிக்கை நிதியத்துக்குப் பங்களிப்பு வழங்காதபோதிலும் ஏனைய நன்கொடையாளர்களின் பங்களிப்பினை அது வரவேற்றுள்ளது எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 15 ஆயிரம்...

15 ஆயிரம் ஆயுதங்களே அழிக்கப்பட்டன. எஞ்சியவை பின்னர் ஒரு தினத்தில் அழிக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு அமைச்சு அறிவித்துள்ளது.

அழிக்கப்பட்ட ஆயுதங்கள் பெரும்பாலும் கட்டுத்துவக்கு, சொட்கண்கள், றிப்பிட்டர்கள், 303 துப்பாக்கிகள் அதிகம் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கைகளை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, பொலிஸ்மா அதிபர், சந்திரா பெர்னாண்டோ , பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா ஆகியோர் மேற்பார்வை செய்தனர்.

## ஹர்த்தால்...

இடம்பெற்றன.

மூன்றாம் கட்டையில் இருந்து வந்த தனியார் பஸ் - கல்வீச்சுக்கு இலக்காகியது இதில் ஒரு மாணவியும், பயணி ஒருவரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கல்வீச்சுச் சம்பவத்தை அடுத்துமூன்றுபேரை பொலிஸார்கைது செய்துள்ளனர். (10,04)

## பொதுக்...

சபைக்குத் தேவையான அங்கத்தவர்களை நியமிக்கும் நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் தற்போது கவனத்திலெடுத்து வருவதாகவும் விடுதலைப்புலிகள் அது குறித்து தீர்மானித்தவுடன் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## மட்டக்களப்பில்..

கோரிக்கை விடுத்தனர்.

கல்லடியிலிருந்து பேரணியாகப் புறப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், பிரதேச செயலகத்தைச் சென்ற டைந்து பிரதேச செயலாளர் என்.சிறீசங்கரிடம், 200 மீற்றர் கடல் பாதுகாப்பு வலய எல்லையை குறைந்தது 100 மீற்றராகக் குறைக்கும்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக கையளித்தனர்.

## துப்பாக்கிச்...

சேர்ந்த 23 வயதான ஏ.கிரிதரன் என்ற இளைஞரே கழுத்தில் படுகாயமடைந்வராவார். இவர் கோவிலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக் காக திருகோணமலைக்கு மாற்றப்பட்டார்.

## கண்ணி..

இந்த பாரிய றிமோட் கொன்றோல் இயந்திரங்களை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்த இயந்திரங்களை இயக்கும் முறைபற்றி இலங்கை இராணுவத்தின் மூன்று அதிகாரிகள் மற்றும் பன்னிரண்டு படையினருக்கு வவுனியாவில் வைத்து மூன்று அமெரிக்க அதிகாரிகள் பயிற்சி வழங்கி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடிகளை அகற்றும் முதலாவது மற்றும் ஆறாவது பொறியியல் படைப்பிரிவுகளையும் கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் ஐந்தாவது மற்றும் ஏழாவது பொறியியல் படைப்பிரிவுகளைச் சேர்ந்த படையினருக்கே இந்தப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

மக்ஸ் பிளஸ் என்ற இந்த இயந்திரங்களின் மூலம் மிக விரைவாக பெரும் நிலப்பரப்பில் கண்ணிவெடிகளை அகற்றமுடியும்.

## கண்ணீர் அஞ்சலி

### A.R.அம்பலவாணர் - நிர்மலாதேவி

புங்குடுதீவு மாவட்ட அரசினர் வைத்தியசாலை உப தலைவர் அம்பலவாணரின் மனைவி நிர்மலா தேவி காலமாகியதை இட்டு துயரடைகின்றோம். இவரின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*மாவட்ட அரசினர் வைத்தியசாலை*
*அபிவிருத்திச் சபை - புங்குடுதீவு.*

(சி-4274)

## மரண அறிவித்தல்கள்

### A.R.அம்பலவாணர் - நிர்மலாதேவி
(தென்னிந்திய திருச்சபை- புங்குடுதீவு)

யாழ்ப்பாணம் சிறாம்பியடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், முதலாம் வட்டாரம் புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்ட தென்னிந்திய திருச்சபைப் பொறுப்பாளர் A.R.அம்பலவாணரின் மனைவி நிர்மலாதேவி நேற்றுக் காலமானார்.

அன்னார் விசுவலிங்கம் - புனிதவதி தம்பதிகளின் அன்பு மகளும், A.R.அம்பலவாணர் - ராஜமலர் தம்பதிகளின் அன்பு மருமகளும், சதீஸ்வரன், லவன், குகதாஸ், கபிலன், தேவகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயதேவி, பற்பநாதன், சற்குணநாதன், சத்தியநாதன், பரமநாதன், நளாயினிதேவி, காலம்சென்ற கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 9.7.2005 இன்று பிற்பகல் 3 மணியளவில் புங்குடுதீவு தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
A.R.அம்பலவாணர் (கணவர்)

(சி-4275)

### திருமதி மனோன்மணி குமாரசாமி

வட்டுக்கோட்டை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி குமாரசாமி 08.07.2005 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி (சுகாதார பரிசோதகர்), அவர்களின் அன்பு மனைவியும், சிவனேஸ்வரன் (ஆங்கில ஆசிரியர்), திருமதி சு.கமலா, திருமதி ச.விமலா (சூட்டி அக்கா), தவனேஸ்வரன் (கம்சனா புடவையகம்), பரமேஸ்வரன் (ஜேர்மனி), விக்கினேஸ்வரன், நடேஸ்வரன் (கணித ஆசிரியர்), குமரகுருபரன் (சுவிஸ்) ஆகியோரின் அனபுத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 09.07.2005 சனிக்கிழமை பி.பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு.கிழக்கு,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:-
நடா மாஸ்ரர் (மகன்)

### தேவராசா பிரதாப் (சேகர்)

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா பிரதாப் நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தேவராசா - ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மகனுமாவார். இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*விவேகானந்தா வீதி, மஞ்சத்தடி,*
*இணுவில்.*

தகவல்:-
திருமதி தேவராசா ரஞ்சிதமலர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## குருநகர் சம்பவத்துக்கு
# அப்பகுதி படையதிகாரியே பொறுப்பேற்க வேண்டும்!
## மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி

யாழ்ப்பாணம்—

குருநகரில் படையினரின் மின்சார வேலியில் சிக்கி மீனவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த விசாரணைக்கு 512 ஆவது பிரிகேட் இராணுவக் கட்டளை அதிகாரி, சம்பவம் இடம்பெற்ற பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட படையதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்த விசாரணையின்போது- மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், குறிப்பிட்ட கடற்பரப்பில் மீன் பிடிக்க இரண்டரை மணித்தியாலங்களே வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், சிறிய பகுதியூடாகவே மீனவர்கள் கடலுக்குச் சென்று வரவேண்டியுள்ளது.

குறிப்பிட்ட முகாம் பகுதியில் இராணுவப் பாதுகாப்பு வேலிகள் ஆகியவற்றைப் பராமரிக்கும் பொறுப்பும் அந்த முகாம் இராணுவப் பொறுப்பதிகாரிக்கே உள்ளது.

எனவே, இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்வது குறிப்பிட்ட இராணுவப் பொறுப்பதிகாரியின் கடமையாகும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி ரோஹித பிரியதர்சன இராணுவ அதிகாரியிடம் தெரிவித்தார்.

மேலும், பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்துக்கு உரிய அமைச்சிடம் இருந்து நட்டஈட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கு உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

## முறையற்ற நிறுத்தல் அளவை பாவித்தவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம்—

முத்திரையிடப்படாத மற்றும் அங்கீகரிக்கப்படாத நியம அளவை பாவித்தமை தொடர்பாக, அளவீட்டு அலகுகளும் நியமங்கள் சேவைகள் திணைக்களத்தால், யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தபோது, இவ்வாறான அளவைகள் வைத்திருந்தவர்களுக்கு தலா 500 மற்றும் ரூ.1000 படி 16500 ரூபா செலுத் தும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

அளவீட்டு சாதனங்களுக்கு முத்திரை இடப்படாமை, அனுமதியளிக்கப்பட்ட நிறுவைப் படிகளுக்குப் பதிலாக சேர்வ் எக்ஸல் பக்கற்றுகள், மஞ்சள் பக்கற்றுகள் உள்ளடக்கப்பட்ட பொதி, பாக்குப்பொதி, மிளகாய்த் தூள் பொதி, சைக்கிள் அச்சு, தேயிலைத்தூள் பொதி போன்றவற்றைப் பயன்படுத்தியதாக இவர்கள் குற்றம்சாட்டப்பட்டிருந்தனர்.

## பாடசாலை சென்ற மாணவனை காணவில்லை என முறைப்பாடு!

யாழ்ப்பாணம்—

விடுதியில் இருந்து பாடசாலைக்குப் புறப்பட்ட மாணவன் ஒருவனைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தர் வீதி, சங்கரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுவேந்திரன் ரதிமோகன் (வயது 9) எனும் மாணவனே காணாமல் போனவராவார்.

வட்டு மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் இந்த மாணவன் வட்டுக்கோட்டை பகுதியிலுள்ள சிறுவர் விடுதி ஒன்றில் தங்கியிருந்து பாடசாலைக்குச் சென்றுவருவது வழக்கம் என்றும், கடந்த மாதம் 27 ஆம் திகதி பாடசாலைக்குப் புறப்பட்ட இவர், விடுதிக்குத் திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து இந்தச் சிறுவர் இல்ல பொறுப்பாளரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

## தொழில்நுட்பக் கல்லூரியின்
# கட்டட புனரமைப்பு பணிகளுக்கு 1.95 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்—

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு அதன் கட்டட புனரமைப்புப் பணிகளுக்கென 1.95 மில்லியன் நிதியை - தொழில்நுட்பத் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஒதுக்கியுள்ளது.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் புதிய கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றபோதும், பழைய கட்டடமும் புனரமைக்கப்படவேண்டிய தேவை இருப்பதால் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான புனரமைப்புப் பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட்டு, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதிக்குள் முடிவடையவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் கட்டடங்களைப் புனரமைப்பதற்கான பணிகள் கட்டடத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நவாலி மகா வித்தியாலயத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை!

நவாலி—

நவாலி மகா வித்தியாலயத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, மானிப்பாய் பிரதேச சபையினரால் சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

1910 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட நவாலி மகா வித்தியாலயம் இதுவரை எந்தவித திருத்தங்களும் மேற்கொள்ளப்படாமல் இருப்பதுடன், கட்டடங்கள் உடைந்துவிழும் நிலையில் உள்ளன. இது தொடர்பாக தாங்கள் அரச அதிபருக்கு வலியுறுத்த வேண்டும் எனவும், சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு உதவி பிரதேச செயலர் - இந்த விடயம் தொடர்பாக அரச அதிபர் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு பாடசாலையைப் புனரமைக்க நடவடிக்கை எடுப்பதாக சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் உறுதியளித்துள்ளார். (44)

# எரிபொருள் நிரப்பு நிலைய கட்டடம் இடிந்து வீழ்ந்தது

வண்ணை—

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கட்டட வேலைகள் முடிவுறும் தறுவாயில் காணப்பட்ட எரிபொருள் நிரப்புநிலையக் கட்டடம் நேற்றுமுன்தினம் நண்பகல் திடீரென்று உடைந்து வீழ்ந்தது. அந்தப் பகுதியில் தொழிலாளர்கள் நின்றபோதும் தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

முற்றவெளிப் பகுதியில் அமைக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலைய கட்டடமே உடைந்தது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் சுமார் 80 லட்சம் ரூபா செலவில் இதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (111)

# புலமைப்பரிசில் முன்னோடிப்பரீட்சை

சங்கானை—

சங்கானை கல்விக்கோட்ட கல்வி அபிவிருத்திக் குழுவினரால் நடத்தப்பட்டுவரும் கோட்டப் பாடசாலைகளின் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை இலக்கம் - 3 இன்று காலை 9 மணிக்கு, ஏற்கனவே நடைபெற்ற பத்து நிலையங்களிலும் நடைபெறவுள்ளது.

முன்பு பரீட்சை இலக்கங்கள் 1 இலும், 2 இலும் பங்குபற்றிய மாணவர்கள் இந்தப் பரீட்சைக்கு குறிப்பிட்ட நிலையங்களில் சமுகமளிக்குமாறு பரீட்சைக் குழுச் செயலாளரும், சங்கானை அ.மி.த.க. பாடசாலை அதிபருமான ஆ.பேரின்பநாயகம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சை சங்கானை தென்னிந்திய திருச்சபை பொருளாளர் பத்மினி பொன்னம்பலத்தின் அனுசரணையுடன் நடைபெறுகிறது. (48)

# சின்னஞ்சிறு செய்திகள்

## வருடாந்த மஹோற்சவம்

உடுவில்—

உடுவில் தெற்கு கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளைமறுதினம் பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை பகல் 11 மணிக்கு தேர் உற்சவமும், வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். மறுநாள் மாலை திருக்கல்யாணம் நடைபெறும். (101)

## எழுதுவினைஞர்களுக்கு பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்டத்தில் எழுதுவினைஞர்களாக நியமனம் பெற்ற 41 பேருக்கான அரச சேவைகள் தொடர்பான 5 நாள் பயிற்சி வகுப்பு - எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதிவரை யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் 2002 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில், மூன்று தொகுதிகளாக நியமனம் வழங்கப்பட்டது. இந்த 41 பேருக்கும் யாழ். மாவட்டத்தில் 5 நாள் பயிற்சி வகுப்பு செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

## ஆயுர்வேத மருந்துகள் விநியோகம்

இருபாலை—

புத்தூர், நீர்வேலி, அச்சுவேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய பகுதிகளில் இயங்குகின்ற ஆயுர்வேத மருத்துவ நிலையங்களுக்கு வலி.கிழக்கு பிரதேச சபையால் - சுமார் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆயுர்வேத மருந்து வகைகள் பகிர்ந்தளிக்கப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வருகிறது. (90)

## வினாடி - வினா போட்டி

தென்மராட்சி—

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையே வலயமட்ட கணித, விஞ்ஞான வினாடி-வினாப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (29)

## சித்திரத்தேர் அமைப்பு

உடுவில்—

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவிலுக்கு பல லட்சம் ரூபா செலவில் புதிதாக சித்திரத்தேர் அமைக்கப்பட்டு வருகிறது.

புதிய தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் (மஹோற்சவத்தின்போது) 17 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றையதினம் சிற்பாசாரி நடராசா சிவபாலனைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.(101)

# கோண்டாவில் வெள்ளவாய்க்காலை சீர்செய்து தருமாறு கோரிக்கை!

யாழ்ப்பாணம்—

கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து, உப்புமடம் சந்திப் பிள்ளையார் ஆலயம் வரையில் வீதிக்கு சமாந்தரமாக வடக்குப் பக்கம் உள்ள வெள்ளவாய்க்காலை சீர்செய்து தருமாறு அந்தப் பகுதி மக்கள் - பொது நிறுவனங்கள் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதி பொதுநிறுவனங்கள் நல்லூர் பிரதேசசபைக்கு அனுப்பிவைத்துள்ள கோரிக்கை அடங்கிய கடிதத்தில் -

கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக மழை காலங்களில் வெள்ளம் வழிந்தோடிச்சென்று, அரசடிப் பிள்ளையார் ஆலயத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ள பெரிய மதகு வழியாக தெற்குப்பக்கமாகச் சென்று, நந்தாவில் குளத்தை அடைகிறது.

அதேபோல கோண்டாவில் வடக்குப் பக்கம் இருந்து வழிந்தோடிவரும் வெள்ள நீரும் பெரிய பாலத்தின் ஊடாகச் சென்றே நந்தாவில் குளத்தை அடைகிறது.

ஆகவே பெரிய பாலத்தைத் தடைசெய்யாமல் அந்தப் பாலத்தின் ஊடாகப் பாயும் வெள்ளம், நந்தாவில் குளத்தை அடைவதற்குரிய தடைகளை அகற்றி, அந்தப் பாதைகளைச் சீர்செய்து தரும்படி கோரிக்கை விடுத்துள்ளனர். (63)






# நிகொட் நிறுவன நிதியுதவியுடன் அனலைதீவில் பொதுமண்டபம்

சுதுமலை—

நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அனலைதீவில் இரு பொதுமண்டபங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பொதுமண்டபமானது அனலைதீவு வடக்கு, அனலைதீவு தெற்கு ஆகிய இடங்களிலேயே அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பொது மண்டபத்துக்கு என தலா ஏழு லட்சம் ரூபாவை நிகொட் நிறுவனம் ஒதுக்கியுள்ளது. (44)

# தென்னிலங்கை போல எமது பாடசாலைகளை உடனடியாகக் கட்டியெழுப்பிவிட முடியாது!

## கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி

கோடிக்கணக்கான நிதியைப் பெற்றுக்கொண்டாலும், தென்னிலங்கை பாடசாலைகள் போல் எமது பிரதேச பாடசாலைகளைக் கட்டியெழுப்ப முடியாது என கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்தகாலப் போரினாலேயே எமது பாடசாலைகள் பெருமளவு அழிவுகளைச் சந்தித்துள்ளன.

அந்தப் பாடசாலைகளைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் உள்ளோம். ஆனால் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும், போரால் அழிவடைந்த பாடசாலைகள் ஒன்றையும் முழுமையாகப் புனரமைக்க முடியவில்லை.

அத்துடன், கோடிக்கணக்கான நிதிகள் எமது கையில் கிடைத்தாலும் - தென்னிலங்கைப் பாடசாலைகளில் காணப்படும் வசதிகள் போல் எமது பாடசாலைகளை வசதியுடன் கட்டியெழுப்ப முடியாது. அதற்கு நீண்டகாலம் எடுக்கும்.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் தற்காலிகமாக மூன்று பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

பூநகரி கல்விக்கோட்டத்தில் இரு பாடசாலைகளும், கிளிநொச்சி நகரத்தில் சிங்கள மகா வித்தியாலயமும் மூடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு நிரந்தர கட்டடம் இல்லாமையால், மூடப்பட்டுள்ள சிங்கள மகாவித்தியாலயத்திலேயே தற்போது வலயக்கல்விப் பணிமனை இயங்கிவருகிறது.

அத்துடன், பரந்தனில் 40 லட்சம் ரூபா செலவில் ஆசிரிய வளநிலையம் ஒன்றையும் அமைத்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஆனி உத்தரம்

உருத்திரபுரம்

சக்திபுரம், உருத்திரபுரம் எள்ளுக்காடு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் ஆனி உத்தர விஞ்ஞாபனம் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பகல் அபிஷேக ஆராதனையும், அன்னதானமும் நடைபெறவுள்ளது. இரவு நிகழ்ச்சியாக விசேட சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன. அன்றையதினம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பறத்தில் வீதியுலா வரவுள்ளார்.

# மன்னார் விபத்தில் மாணவன் உயிரிழப்பு

மன்னார்

மன்னார் - பாலியாற்றுப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் பாலியாற்றிலிருந்து வெள்ளாங்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவன் மீது மிக வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதிய போதே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் பாலியாற்றைச் சேர்ந்த 7 வயதுடைய லிங்கேஸ்வரன் மதுஷன் என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

# சுழற்சிமுறையில் கடன்

கிளிநொச்சி

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வலுவிழந்தவர்களின் நலன் கருதி உழைத்துவரும் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம், வலுவிழந்தோரின் வருமான அதிகரிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் சுழற்சிமுறையில் ஓர் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு, இனங்காணப்பட்ட 34 பயனாளிகளுக்கு அவரவர் தொழில்களுக்கேற்ப 95 ஆயிரம் ரூபா முதற்கட்டமாக வழங்கப்பட்டது.

# நானாட்டானில் மண் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை

மன்னார்

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் சட்டவிரோத மண் அகழ்வு குறைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசங்களில் ஐந்து இடங்களில் மட்டும் மண் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நானாட்டான் பிரதேச செயலர் ந.திருஞானசம்பந்தன் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்தகாலங்களில் இந்தப் பகுதியில் இருந்து சட்டவிரோதமான மண் அகழ்வு இடம்பெற்றது. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தற்பொழுது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருள் அதிகாரசபை அனுமதியுடன் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஐந்து இடங்களில் மட்டும் மணல் அகழ்வுக்கான அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒவ்வொரு இடத்திலும் மாதம் 2 ஆயிரத்து 110 கியூப் மண் மட்டுமே அகழ்வு செய்ய முடியும்.

இந்தப் பகுதியில் எடுக்கப்படும் மண் பள்ளங்கோட்டை, பரிகாரிகண்டல் ஆகிய இடங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டு, பின்னர் அங்கிருந்தே விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.



வவுனியா நகரசபை மண்டபத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் அண்மையில் நடத்தப்பட்ட பெண்களுக்கான கைப்பணிக் கண்காட்சியைப் பார்வையிடுவோரை படத்தில் காணலாம். படம் - கனகரவி

## கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிப்பு

கிளிநொச்சி

தமிழர் தாயகம் முழுவதிலும் கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

யுனிசெப், வெண்புறா நிறுவனங்கள் இணைந்து கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நாளை வரை இந்த விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக் கப்படவுள்ளது.

இந்த விழிப்புணர்வு வாரத்தில் வெடிபொருட்கள் தொடர்பான அபாயங்கள் குறித்து மக்கள் மத்தியில் கருத்துக்கள் முன்வைக்கப்படவுள்ளன.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜூலை - 09

1818 : ஸ்பெயினின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து விடுதலை அடைந்ததாக ஆர்ஜென்ரீனா பிரகடனம் செய்தது.

1900 : ஆறு குடியேற்றங்களை இணைத்து அவுஸ்ரேலியா கொமன்வெல்த் என்ற அமைப்பை உருவாக்கும் சட்ட மூலத்தை பிரிட்டிஷ் நாடாளுமன்றம் நிறைவேற்றியது.

1917 : வடகடலில் - பிரிட்டிஷ் போர்க்கப்பலான வொன்கார்ட் அதில் வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகள் தீப்பற்றிக் கொண்டதால் வெடித்துச்சிதறியது.

: முதலாம் உலகப்போர் காரணமாக உணவுப்பொருள், எரிபொருட்கள், உலோகங்களது ஏற்றுமதிக்கு அமெரிக்கா தடைவிதித்தது.

1919 : சோவியத் யூனியனில் ஒரே ஒரு இராணுவம்தான் இருக்க வேண்டும் என்ற சுற்றறிக்கையை லெனின் வெளியிட்டார்.

: உலகப்போர் மூளும் அபாயம் இருப்பதாகக் கூறி, பிரிட்டன் தனது மக்களுக்கு 3.5 வாயு முகமூடிகளை வழங்கியது.

1943 : பிரான்ஸ், பிரிட்டன், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளது படைகள் இணைந்து சிலி மீது தாக்குதலைத் தொடங்கின. 3700 போர் விமானங்கள், 2500 போர்க்கப்பல்கள், 5 லட்சம் வரையிலான போர்வீரர்கள் இந்தத் தாக்குதலில் பங்குகொண்டனர்.

1951 : இங்கிலாந்தில் மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் ஃபெர்ராண்டி மார்க் - 1 என்ற கணினி முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது.

1965 : உலகிலேயே அதிக வயதில் நீதிபதி ஒருவர் ஓய்வுபெற்றார். அமெரிக்காவைச் சேர்ந்த நீதிபதி அல்பேர்ட் ஆர். அலெக்ஸாண்டர் என்பவர் தனது 106 ஆவது வயதில் கிளிங்டன் கவுண்டி நீதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்றார்.

1969 : கனடாவில் ஆங்கில மொழி அல்லது பிரெஞ்ச் மொழி பயன்படுத்த உரிமையளிக்கும் மொழிச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

1979 : அமெரிக்காவில் 1977 ஓகஸ்ட் 20 ஆம் திகதி அனுப்பப்பட்ட வொயேஜர் - 2 என்ற விண்கலம் வியாழக்கிரகத்தை நெருங்கி அதுபற்றிய தகவல் குறிப்புகளை அனுப்ப ஆரம்பித்தது.

1980 : 22 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் ரஷ்ய ஜனாதிபதி லியோனிட் பிரஸ்னேவ்வால் மொஸ்கோவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் 81 நாடுகளைச் சேர்ந்த 5326 வீரர்கள் கலந்துகொண்டனர்.

1981 : கென்னர் என்ற இடத்தில் போயிங் 727 விமானம் புறப்படும் போதே நொருங்கி விழுந்ததில் அதிலிருந்த 146 பயணிகளும், தரையிலிருந்த 8 பேரும் இறந்துபோயினர்.

1991 : தென்னாபிரிக்கா மீது சர்வதேச ஒலிம்பிக்குழு விதித்திருந்த தடையை 21 வருடங்களுக்குப் பிறகு நீக்கியது.

1994 : வடகொரிய ஜனாதிபதி கிம் இல் சுங் காலமானார். இவர் தொடர்ந்து 40 வருட காலம் பதவியில் இருந்தார்.

1995 : வலி. வடக்கு, வலி. மேற்கு பகுதிகளில் இலங்கை இராணுவத்தினால் 'முன்னேறிப் பாய்தல்' படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

: நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயச் சுற்றாடல் மீது நடத்தப்பட்ட புக்காரா குண்டுவீச்சில் 38 இற்கும் மேற்பட்ட சிறுவர் உட்பட 157 பேர் உடல் சிதறிப் பலியாகினர்.

தொகுப்பு - சந்துரு

# முல்லைத்தீவு மக்களுக்கு சேவையாற்ற வைத்தியர்கள் முன்வரவேண்டும்!

## பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு இந்த மாவட்ட வைத்தியர்கள் முன்வரவேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையால், இந்த மாவட்டத்துக்கான வைத்திய சேவையை முழுமையாக வழங்கமுடியாத நிலை காணப்படுகிறது.

இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பலர் இங்கு சேவையாற்ற விரும்பாது, வேறு மாவட்டங்களில் சேவையாற்றி வருகின்றனர்.

இத்தகைய வைத்தியர்கள் தமது பிரதேச மக்களுக்கு சேவையாற்ற முன்வரவேண்டும்.

இந்த மாவட்டத்திலுள்ள பல வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்தியர்கள் இன்றி, ஒப்பந்த அடிப்படையிலான வைத்தியர்களே சேவையாற்றும் நிலை காணப்படுகிறது.

போதியளவு வைத்தியர்களை இந்தப் பகுதிக்கு அனுப்புவதில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லை.

இதனால் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் தமது பிரதேசத்தில் சேவையாற்ற முன்வரவேண்டும் என அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

## பயிற்சிப்பட்டறை

கிளிநொச்சி

கிளிநொச்சி - கரைச்சி கோட்ட ஆசிரியர்களுக்கான அரங்க பயிற்சிப்பட்டறை நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமானது.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் ஒக்ஸ்பாம் உதவியுடன் கிளிநொச்சி அழகியல் கலாமன்ற மண்டபத்தில் இந்தப் பயிற்சிப் பட்டறை இடம்பெற்றுவருகிறது.

இந்தப் பயிற்சிப் பட்டறை நாளை வரை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.